


1925 – 1975

Bhavani-Nadarajah.

# பொன் விழா மலர்

## கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை

## கொழும்பு

# அரை நூற்றாண்டு நிறைவு

# 1925 - 1975

## කතරගම වන්දනා ස්වෙච්ඡා සේවක සමිතිය

## කොළඹ.

# රජත ජයන්තිය

## 1925 - 1975

## Kataragama Pilgrims Thondar Society

# Golden Jubilee Souvenir

## 1925 - 1975


பத்திராதிபர் குழு :

சிவஞானவாரிதி கு. குருசுவாமி


சிந்தனைச்சிற்பச்செல்வர். ச. த. சின்னத்துரை ஜே. பி.



பதிப்பு :

நியூ லீலா அச்சகம், கொழும்பு-12

உ
முருகன் துணை



கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபைத்தலைவர்

# ஆ. சின்னத்தம்பி ஜே.பி. அவர்கள்

# வழங்கும் ஆசியுரை

கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை 1925-ம் ஆண்டு முதல் இன்றுவரை தொடர்ந்து அரை நூற்றாண்டுக்காலமாக ஆற்றி வந்த சேவையை நினைவுகூறுமுகமாக இப் பொன்விழா கொண்டாடுவது எமது சபையின் வரலாற்றிலே பொன் ஏடுகளாற் பொறிக்கப்படவேண்டியதொன்றாகும்.

எமது சபையின் தொண்டு குறைவின்றி நடாத்திவருவதற்கு உதவி செய்துவரும் அன்பர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது சபையினது சேவை என்றும் தொடர்ந்து நடைபெற முருகப்பெருமான் அருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்தித்து, பொன்விழா சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-- ஆ. சின்னத்தம்பி ஜே. பி.

[illegible]

கற்பகமே! செழுங்கனியே! சுவையே! மோனம்

பெற்றவருள் ளுணர்ந்தும் பேசா வின்பப்

பெருவாழ்வே! கருவாழ்வே பெரிதென் றுன்னி

நற்றவத்தோர் பாலணுகா நலமி லேன்றன்

நவைதீர்க்க வருவதென்றோ நாதா வாதக்

கற்றலமுட் டோன்றுத கதிர்கா மத்தின்

கடவுளடி யகம்புறமுங் கருதாய் நெஞ்சே.

— சண்முகானந்த சுவாமிகள் —






கலியுக வரதனும்
கதிர்காமக் கந்தனுக்கு
சமர்ப்பணம்.

கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, கொழும்பு.

உ

# பிள்ளையார் திருவருட்பா

உன்னரு ளிலாமலிந் நாளளவும் வீணாய்
    உலைந்திந்த உலக தனிலே
ஓடித் திரிந்துபொருள் தேடித் திகைத்திதயம்
    ஓய்வுற் றொடுங்கி இன்றுன்
மன்னருள் நிறைந்தசர ணங்களே சரணென்று
    வாடியுனை வந்த டைந்தேன்
மருவினிய திருவருள்பு ரிந்தெனிடர் நீக்கியென்
    மனநினை வெலா மருவவே
நின்னடிக ளொருகாலு மறவாத நேயமொடு
    நீடுகலை ஞான வுணர்வும்
நித்தியசை வாசார சுத்தமிகு பத்திபெறு
    நிலைகொளருள் அறி வுதவியே
வன்மைதரு தீங்குகள் எலாமொருவ வேபுவி
    மதிக்கவருள் புரி கதிரைவாழ்
வடிவேல வற்று முனம் வருவா ரணப்பிரணவ
    வடிவான மாணிக் கமே.

— திருநெல்வேலி திருஞானசம்பந்தப் புலவர் —



கொழும்பு கப்பித்தாவத்தையில் எழுந்தருளியிருக்கும்

**ஸ்ரீ பால செல்வ விநாயகமூர்த்தி.**

17 - ம் நூற்றுடின் பிற்பகுதியில் ஸ்தாபிதம் செய்யப்பெற்ற தேவநாகரி யந்திரத்தைக் காண்க.



திருக்கோணேஸ்வர ஆலய சபைத் தலைவர்

சட்டத்தரணி

## மு. கோ. செல்லராசா ஜே.பி.யு.எம்.

அவர்கள்

# வாழ்த்து

கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை தனது 50-வது நிறைவு காணும் இவ்வேளையில் பாடல்பெற்ற பெரும் பதியின் தொண்டன் என்ற முறையில் நல்லாசி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒன்றல்ல - இரண்டல்ல - ஐம்பதாவது நிறைவு காணுகின்றது என்ற போது அதன் தொண்டினை அறிந்தவன் என்ற முறையில் மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன்.

இத்தனை ஆண்டுகள் எத்தனை ஆயிரம் முருகன் அடியார்கள் - சைவப் பெரியார்கள் - எத்தகைய பெரும் பயன் பெற்றுர்கள் என்பதை எண்ணிப் பார்த்தால் - தொண்டர் சபையினரின் உன்னத உழைப்பு - பயன் நோக்கா தொண்டுள்ளம் - என்றும் ஈழத்தின் வரலாற்றுடன் பிணைந்து நிற்கும் என்ப தில் ஐயமில்லை.

சைவ சமயத்தின் முக்கிய பகுதி யாத்திரை செய்வதாகும் என்பதை சைவ உலகம் நன்கு அறயும். யாத்திரீகர்களுக்கு உணவும் உறைவிடமும் வழங்கும் பணி அதனைவிடச் சிறந்த பணி என்று துணிந்து கூறுவேன்,

கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை என்றும் இறவாப்பணிசெய்ய தென்கைலாய கோணைநாதப் பெருமானின் திருவடிகளை வணங்கி வாழ்த்து கின்றேன்.

பல்லாண்டு நல்ல பணிசெய்ய கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபையினரை வாழ்த்துகின்றேன்.

வணக்கம்.

அருள் அன்பன்

ஏகாம்பரம் வீதி,
திருகோணமலை.

மு. கோ. செல்லராசா

கதிர்காம யாத்திரீகர்கள் அன்னதான சபை

50-ம் ஆண்டு விழாச் சபைக் குழுவினருக்கு

மெய்கண்டார் ஆதீனம்

# ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்

# வழங்கும் ஆசியுரை

மனிதனுடைய வாழ்வைப் புனிதமடையச் செய்யவே ஆலயங்கள் தோன்றின. சமயங்களும் தோன்றின. வேள்வி யாகம் தானம் தவம் முதலியனவும் முன்னைநாள் வழிவழி வந்த தெய்வத் தன்மையுடைய பெரியோர்களால் பண்புடன் செயல்பட்டு வருகின்றன. அப்படியான பணிவிடையிலே மிகச் சிறந்ததானது அன்னதானம். அன்னவலையில் அகப்படுவன் அரன் என்பது ஒளவையார் வாக்கு. தானம் செய்வதால் புண்ணியம் மேலோங்கிறது. புண்ணியம் வளர்கிறது. அதனால் மனிதன் சுவர்க்கம் முதலிய சிறந்த போகங்களை அடைகின்றான் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இப்படியான சிறந்த புண்ணியமான செயலை முழு மனதுடன் ஒத்துழைத்துச் சிறப்பாக நடத்தி வரும் அன்பர்கள் இறைவன் பூரண ஆயுளையும் நிறைந்த செல்வங்களையும் பெற்று இனிது வாழுமாறு கொழும்பில் கதிர்காம உற்சவ காலத்தில் யாத்திரீகர்களுக்கு அன்னதானம் நடத்துவதற்குகந்த மடாலயம் ஒன்றினைக் கப்பித்தாவத்தையிற் கோயில்கொண்டெழுந்தருளுயிருக்கும் சர்வாபீஷ்டவாத ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி தேவஸ்தானத்திற்கருகாமையில் அமைந்திருப்பது பொருத்தமே. அரை நூற்றுண்டுவிழாக் கொண்டாடும் கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபைக்கும், அன்னதானப் பணிக்கு உதவும் அன்பர்களுக்கும் தில்லையுட் கூத்தன் திருவருள் புரிவாராக.

சுபம்.

இங்ஙனம்

ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்


உ
சிவமயம்

சைவப் புலவர்மணி

த. குமாரசுவாமிப்பிள்ளை

திருவாவடுதுறை ஆதீனம்: புலவர்
மதுரை ஆதீனம்: சிவகதாப்பிரசங்கபூஷணம்
மெய்கண்டாராதீனம்: பெருஞ்சொல்வித்தகனர்

# ஆசிச்செய்தி



கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை 1925-ம் ஆண்டுமுதல் ஐம்பது ஆண்டுகளாகக் கதிர்காம உற்சவ காலத்தில் கதிர்காமத்தில் எழுந்தருளி வீற்றிருந்து தம்மை வழிபட வருமடியவர்களுக்கு இன்னருள் பாலித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு பேரின்பப் பெருவாழ் வளிக்கும் கந்தனை வந்தனை செய்யச் செல்லும் அடியவர் களுக்குக் கொழும்பிலும், மாத்தறையிலும் தங்குவசதி செய்தும் அன்னதானம் வழங்கியும் தொண்டாற்றி வருவது பாராட்டிப் போற்றுதற்குரியது. இத்தொண்டு என்றென்றும் நிலைத்திருக்கக் கதிர்காமக் கந்தன் கருணை பொழிவானாக.

பொன்விழாக் கொண்டாடும் இவ்வமையத்தில் இச் சபையின் தொண்டு மேன்மேலும் வளர்ச்சியுற எனது நல்வாழ்த்துக்கள்.

சைவப் புலவர்மணி
த. குமாரசுவாமிப்பிள்ளை



# வழக்கறிஞர்

# ஆ. செ. நடராசா அவர்களின்

# ஆசிச்செய்தி

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தாறும் ஆண்டு உருவாக்கப்பட்ட கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை நிலைகுலையாது இன்றும் தனது தொண்டைக் குறைவற நடாத்தி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயம். யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து கதிர்காம யாத்திரை செய்பவர்களுள் மிகச் சிலரே கொழும்பில் வசதியாகத் தங்கிப் பயணம் செய்யக் கூடியதாயிருக்கிறது. யாத்திரிகர்களின் கஷ்டத்தை உணர்ந்த சிலர் இத்தொண்டர் சபையை ஆரம்பித்துவைத்தனர். அவர்களுக்கு எங்கள் சமூகம் என்றும் நன்றி உடையதாக இருக்க வேண்டும். தளராது ஒவ்வொரு ஆண்டும் இத்தொண்டைத் தொடர்ந்து நடாத்திவரும் திரு. ஆ. சின்னத்தம்பி, கேணல். சபாநாயகம் போன்ற பெரியாரைத் தொடர்ந்து வருங்காலத்திலும் அன்பர்கள் முன்வர முருகன் அருள்புரிவாராக.

ஐம்பது வருடங்களுக்குமுன் கதிர்காம யாத்திரை செய்பவர்கள் திசமாருவிலிருந்து கால்நடையாகவே காட்டுவழியால் போய்வருவார்கள். இந்த யாத்திரிகர்களுக்கு இச்சபை சாப்பாடு தண்ணீர் முதலியவை கொடுத்துதவி வந்ததை யாரும் மறப்பதற்கில்லை.

தனக்கென ஒரு இடம் எடுத்துக் கட்டிடமும் கட்டி அத்துடன் சிறுவர்கள் கல்விகற்க தொண்டர் வித்தியாலய வசதிகளும் அமைத்து இச் சங்கம் தன்னுடைய சேவையை விருத்தி செய்துகொண்டு வருவது வரவேற்கத்தக்க, மெச்சத்தக்க செயலாகும். இச்சபை தொடர்ந்து தனது சேவையைச் சிறப்புற நடத்திவர மனதார வாழ்த்துகிறேன்.

ஆ. செ. நடராசா

12-3-76



உ
சிவமயம்

ஸ்ரீ இராமகானசபைத் தலைவரும், அகில இலங்கை
சிவப்பிராமண சங்க உப தலைவரும் கப்பித்தாவத்தை
ஸ்ரீ பால செல்வவி.நாயக மூர்த்தி தேவஸ்தான
பிரதம குருவுமாகிய

## பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா

அவர்களது

# ஆசியுரை

கப்பித்தாவத்தையில் கோவில் கொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமானது கருணையினலே கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை கடந்த அரை நூற்ருண்டு காலமாக ஆற்றிவரும் தமிழ்த் தொண்டு, சைவத் தொண்டு, மனிதாபிமானத் தொண்டு ஆகியவை மென்மேலும் வளர்ச்சியுற எனது மனமார்ந்த ஆசிகளைத் தெரிவிப்பதுடன் பொன்விழா சிறப்புடன் நிறைவுபெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பா. சண்முகரத்தின சர்மா

# 1975-76-ம் வருட செயற்குழு

| | |
|---|---|
| தலைவர்: | திரு. ஆ. சின்னத்தம்பி J. P. |
| உப தலைவர்: | கேணல் இரா. சபாநாயகம் JP., OBE. |
| ,, | திரு. ச. த. சின்னத்துரை JP. |
| ,, | டாக்டர் சி. சரவணமுத்து |
| ,, | திரு. க. நாகேந்திரா |
| ,, | திரு. க. கனகசிங்கம் |
| ,, | திரு. வை. பொன்னுச்சாமி |
| கௌரவ பொதுச்செயலாளர் | திரு. க. ஈசுரபாதம் |
| கௌரவ உதவிச்செயலாளர் | திரு. மு. கணேசபிள்ளை |
| கௌரவ தனாதிகாரி | திரு. த. நடேஸ்வரன் |
| கௌரவ உதவித்தனாதிகாரி | திரு. தி. பாலசுந்தரம் |
| கௌரவ சமயச் செயலாளர் | திரு. கு. குருசாமி |
| கௌரவ மட பரிபாலகர்: | திரு. செ. நாகராசா |
| கௌரவ உதவி மட பரிபாலகர் | திவு. வே. பாலகிருஷ்ணன் (29.8.75 வரை) |
| ,, ,, ,, ,, | திரு அ. சிவசுப்பிரமணியம் |
| செயற்குழு அங்கத்தவர்: | திரு. ஆ. விமலச்சந்திரா |
| ,, ,, | திரு. இ. திருநாவுக்கரசு |
| ,, ,, | வித்துவான் இ. சி. சோதிநாதன் J.P. |
| ,, ,, | திரு. வே. சுப்பிரமணியம் |
| ,, ,, | திரு. த. அமிர்தானந்தர் |
| ,, ,, | திரு. ச. புஷ்பநாதன் |
| ,, ,, | திரு. வே. வல்லிபுரம் |
| ,, ,, | திரு. ந. த. துரைராசா |
| ,, ,, | திரு. க. கனகசபை |
| ,, ,, | திரு. இ. இராசநாயகம் |
| ,, ,, | திரு. சி. கந்தசாமி |
| ,, ,, | திரு இ. ஆறுமுகம் |
| ,, ,, | திரு. செ. நடராசா |
| ,, ,, | திரு. அ. தம்பிராசா |
| ,, ,, | திரு. இ. முருகையா |
| ,, ,, | திரு. து. இராஜேஸ்வரன் |

உ

முருகன் துணை

# ஐம்பது ஆண்டுகள் அரும்பணி ஆற்றிவரும்

# கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை

(தென்புலோலியூர், மு. கணபதிப்பிள்ளை)

ஐம்பது ஆண்டுகள். ஓர் அரை நூற்றுண்டுக்காலம். அக் காலத்தினை ஒருமுறை நினைத்துப் பார்த்தல் வேண்டும். இலங்கையின் பெரும் பகுதி அக் காலத்தில் அடர்ந்த காடாகவே கிடந்தது. ஊவா மாகாணத்துப் புத்தல் என்னும் பிரிவிலே தீயனகமம் எனப்படும் காடும் அப்படியேதான் அடர்ந்து கொடிய வன விலங்குகள் உலாவும் காடாகக் கிடந்தது. அந்தக் காட்டிலே பரப்ப ஓயா எனப்படும் மாணிக்க கங்கையின் இடது புறக்கரையிலேதான் முருகன் விரும்பிக் கோயில் கொண்டருளியிருக்கும் ''கதிர்காமம்'' உள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடங்கி இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் அடியார்கள் பெருந்தொகையினராகச் சென்று வழிபாடியற்றுவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. போக்குவரத்து வசதிகளும் செவ்விய பாதைகளும் அமைந்திராத அக் காலத்திலே மக்கள் நடமாட்டமில்லாத காட்டு வழியாக முருகன் அடியார்கள் பெருந்தொகையினராகச் சென்று வழிபாடியற்றி வந்தமை உண்மையிலேயே வியப்புக்குரியதேயாகும். போக்குவரத்து வசதிகள் ஓரளவுக்கு ஏற்பட்ட பின்புகூடக் கதிர்காமத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு இன்றியமையாத சௌகரியங்கள் குறைவாகவே இருந்தன.

கதிர்காமம், கொழும்பிலிருந்து ஏறக்குறைய 170 மைல் தொலைவில் உள்ளது. அம்பாந்தோட்டையிலிருந்து ஏறக்குறைய 60 மைல் தொலைவிலும், திசைமாராமத்திலிருந்து ஏறக்குறைய 10 மைல் தொலைவிலுமாக இத்திருக்கோயில் அமைந்திருக்கிறது. கதிர்காமத்துக்குச் செல்பவர்களுள்ளே பெரும்பாலானோர் கொழும்புக்கு வந்தே அங்கிருந்து கதிர்காமம் செல்வது வழக்கம். கொழும்பிலிருந்து மாத்துறைவரை புகைவண்டியிலே செல்லக்கூடிய வசதி ஏற்பட்டதன்பின், கதிர்காமத்துக்குச் செல்லும் யாத்திரிகர் புகைவண்டிவாயிலாக மாத்துறைவரை சென்று, அங்கிருந்து வசு வண்டியில் திசைமாராமம் வரை செல்வர். திசைமாராமத்திலிருந்து சிலர் மாட்டு வண்டிகளில் ஏறிக் கதிர்காமத்தை அடைவார்கள். எனினும், அக் காலத்திலே பெருந்தொகையானோர் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து திசைமாராமத்திலிருந்து கால்நடையாகவே ஆடிப்பாடிக் கொண்டு கதிர்காமம் செல்வார்கள். அகலமான கற்பாதை அமைக்கப்படாதிருந்த அக் காலத்திலே, அடியவர்கள் எழுப்பும் ''அரோகரா'' சத்தம் அக் காட்டுப் பகுதியில் எதிரொலித்து, கொடிய வன விலங்களை அப் பகுதியினை நாடாமற் செய்துவிடும். யாத்திரை செய்யும் அடியவர்கள் ஆவேசத்தால் முருகன் புகழையே பாடிக்கொண்டு தூரம் தெரியாமலே செல்வர். கதிர்காம முருகனையன்றி வேறு ஒரு நினைவும் இல்லாமற் செல்லும் அடியார் வரிசையினைச் சார்ந்தவர்கள் அவர்கள்.

கதிர்காமத்துக்கு யாத்திரையை மேற்கொள்வோர் அக் காலத்திலே தாம் தாம் நினைத்தபடி, விழைந்த போதெல்லாம் புறப்பட்டுச் செல்வதில்லை. கதிர்காம முருகன் அடியவர்களுக்குக் கனவிலே தோன்றி, வருமாறு விடையளித்தாலன்றி அவர்கள் யாத்திரையினை மேற்கொள்வதில்லை. அங்ஙனம் யாத்திரையை மேற்

கொள்ளுவோரும் பெரும்பாலும் ஆடி அல்லது ஆவணி மாதத்தில் நடைபெறும் கொடியேற்றத் திருவிழாவினை அண்டியே கூட்டமாகக் கூடிச் செல்வார்கள். அப்படியாகச் செல்வோருள்ளே செல்வர்களும் ஏழைகளும் இருப்பார்கள். பாலர்களும் முதியோரும் இருப்பார்கள். குமரியரும் கிழவியரும் இருப்பார்கள். முதலாளிகளும் தொழிலாளர்களும் இருப்பார்கள். இவர் எல்லோருமே யாத்திரையினை மேற்கொண்டவுடன் ஒரே நிலையுடையவர்களாகி விடுவார்கள். அவர்கள் எல்லோரது வாயிலும் "அரோகரா" அல்லது "முருகா" என்ற சொற்கள்தாம் ஒலித்துக்கொண்டிருக்கும். சாதி, குலம், பிறப்பு, பதவி என்பன யாவும் அவ் வேளையிலே வலியிழந்து அகன்று விடுகின்றன. தனக்குமுன் எல்லோரும் சமன் எனக் காட்டுகின்றான் கதிர்காம முருகன்.

இந்த நிலையிலே கொழும்புக்கு வந்து அங்குமிங்கும் தங்கி நின்று அல்லற்பட்டு, பின் மாத்துறைக்குச் செல்லும் புகைவண்டி கிடைத்தபோது ஏறிச்செல்லும் யாத்திரிகர்களைச் சிலர் சில ஆண்டுகளாகக் கவனித்தார்கள். அந்தச் "சிலர்" யாழ்ப்பாணத்திலிருந்து உத்தியோகம் நாடியும் வர்த்தக நோக்கத்துடனும் கொழும்புக்கு வந்தவர்கள். யாத்திரிகர் படும் அவலங்கள் அவர்களது கண்களை உறுத்தின. இதயங்களையும் தாக்கத் தொடங்கின. வசதி படைத்தவர்கள் சிலர், தமக்கு அறிமுகமானவர்களைத் தமது இல்லங்களுக்கோ வேறு வசதியான இடங்களுக்கோ அழைத்துச் சென்று உபசரித்து, பின் புகைவண்டியில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். அப்படியாகச் சிலருக்கு மட்டிலும் வசதி கிடைத்தமை கண்டு "பலர்" மனம் புண்படத் தொடங்கியது. அவர்கள், யாத்திரிகர்களாகக் கொழும்புக்கு வருவோரை மருதானைப் புகைவண்டி நிலயத்திலே எதிர்கொண்டழைத்து, இயன்ற வசதிகளை ஏற்படுத்தியமைத்து, கொழும்பிலே அவர்கள் தங்கிச் செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்தளிக்க முன் வந்தார்கள். கதிர்காம முருகனை வழிபடுவதற்காகச் செல்வோர், செல்லும் வழியிலே ஓரிரு நாட்கள் தங்கி, இணைப்புப் புகைவண்டி கிடைக்கப்பெற்றதும் ஏறிச் செல்வதற்கு வேண்டிய வசதிகளை அமைத்தளிப்பதற்குத் திட்டமிட்டார்கள். அந்த "நல்லவர்கள்", செய்வதற்குத் திட்டம் ஒன்றினை உருவாக்கி நடைமுறைபடுத்தத் தொடங்கிய ஆண்டு, 1925-ம் ஆண்டு ஆகும். அந்த ஆண்டிலே நடைமுறைப்படுத்தப்படத் தொடங்கிய திட்டம் - 50 ஆண்டுகள் கழிந்தும் - தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்தத் தெய்வத் திருத்தொண்டினை 1925-ம் ஆண்டிலே தொடக்கி வைத்தவர்களுள்ளே முன்னின்று உழைத்தவர் ஒருவர். அவர் பெயரினைக் குறிப்பிடாமலே அவ்வளவு மதிப்பும் மரியாதையும் காட்டி, "பொரளைப் பெரியார்" என யாம் அழைப்பதுண்டு. உண்மையிலே, அவர் பெரியார் என யாம் போற்றுவதற்கேற்ற நற்குணமும் பண்புகளும் வாய்ந்தவர். புங்குடுதீவிலே தோன்றிய புண்ணியர். சைவாசாரம் நிறையப்பெற்றுக் கந்தபுராணப் பண்பாடு காத்ததொரு குடும்பத்திலே தோன்றிய திரு. நா. கா. நாகலிங்கம் என்னும் பெரியாரே அவர். தமது இளமைக் காலத்திலே கொழும்புக்கு வந்து, சாதாரண கடைச் சிப்பந்தியாக வாழ்க்கையைத் தொடங்கி, பொரளையிலே வர்த்தகம் புரிந்தவர். அறநெறி சார்ந்த வகையிலே வர்த்தகம் நடாத்தி நாளடைவிலே பொரளையில் ஆறு கடைகளுக்கு உரிமையாளராய் விளங்கியவர். தாம் ஈட்டிய பொருளினைப் பெரும்பாலும் அறப்பணிகளிலே செலவிட்டு இன்பம் கண்டவர். பிறருடைய துன்பம் கண்டு உருகி, உதவிகள் புரிந்தவர். அப்படிக்கொத்த நற்பண்புகள் நிறைந்த பெரியார் திரு. நாகலிங்கம் அவர்கள் இத் தெய்வத் திருத்தொண்டினைத் தொடக்கி வைத்தார் என்பது வியப்பினுக்குரிய செயல் எனக் கூறவேண்டுவதில்லை. அது அவர்களது நாடி நரம்புகளில் ஊறி வலுப்பெற்ற பண்பு. அவர்களது இல்லம், யான் கொழும்புக்கு

வந்து அவர்களை அறிந்து உறவுகொள்ளத் தொடங்கிய காலத்திலும் ஒரு "தரும சத்திரம்" எனப்படத் தக்கதாகவே விளங்கிக் கொண்டிருந்தது. சைவப் பணிகளுக்கு மட்டும் அவர்கள் உதவினார்கள் என்பது தகாது. தமிழியல் வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் அவர்கள் காட்டி வந்த ஆர்வம் எவராலும் எப்பொழுதும் போற்றப்படவேண்டிதொன்றாகும். அவர்களுடைய இல்லத்திலேதான் இலங்கை இலக்கிய வரலாற்றிலே சிறப்பாகக் குறிப்பிடவேண்டிய "இலக்கிய நண்பர்கள்" கழகம் தொடங்கப்பெற்றது. அக் காலத்திலே அக் கழகத்தினை அமைப்பதற்கு மூலகாரணமாய் விளங்கிய திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் திரு. நாகலிங்கம் அவர்களின் இல்லத்திலேதான் ஓர் அறையிலே தங்கி வாழ்ந்து வந்தார். அக் காரணத்தினாலே முதலியார் குல. சபாநாதன், திரு. சோ. நடராசன், திரு. சோம சரவணபவன், திரு. அருள் தியாகராசா ஆகியோருடன் யானும் அடிக்கடி அவர்கள் இல்லத்திற்குச் செல்வதுண்டு. அக் காலத்தில் அவர்களின் தொண்டு எத்தகையது என்பது எமக்குப் புலனாயிற்று.

இப்படி எத்தனையோ தொண்டுகளில் ஈடுபட்டிருந்த திரு. நாகலிங்கம் அவர்களுக்கு 1942-ம் ஆண்டிலே ஒரு பேரின்னல் ஏற்பட்டது. அவருடைய அருமை மனைவியாரும் செல்வக் குழந்தைகள் இருவரும் பண்ணைக் கடலிலே படகு கவிழ்ந்தமையால் இறந்து போனார்கள். அந்தப் பரிதாப நிகழ்ச்சிக்குப் பின்னதாகவும் திரு. நாகலிங்கம் அவர்கள் தாம் செய்துவந்த பணிகள் எவற்றையும் கை நெகிழவிடாது இயற்றிவந்தமையொன்றே அவர்கள் பயன் கருதாத தொண்டுக்கு நல்லதொரு சான்றாகும்.

திரு. நாகலிங்கம் அவர்களுடன் அவ்வாண்டிலே கதிர்காம யாத்திரிகர்களுக்கான வசதிகளைச் செய்தளித்தோர் பலர். அவர்களுள்ளே திரு. ஆ. சின்னத்தம்பி, திரு. கா. கணபதிப்பிள்ளை, திரு. சி. வேலுப்பிள்ளை ஆகியோரைச் சிறப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். அன்று தொடங்கிய பணியினைத் தொடர்ந்து ஆற்றி வருவதில் இத்தனை ஆண்டுகளும் அயராது உழைத்துவரும் திரு. ஆ. சின்னத்தம்பி அவர்கள் தொண்டு சாலப்பெரியது. அவர்களது தொண்டின் விழுப்பமே இன்று அவர்களை "அகில இலங்கை இந்து மாமன்றம்" எனப்படும் பாரிய நிறுவனத்து உயர்நிலைப் பதவியில் - தலைவராக உயர்த்தி வைத்துள்ளது.

1925-ம் ஆண்டிலே இந்தத் தெய்வத் தொண்டினைத் தொடங்கியபோது, திரு. சி. வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில், திரு. நா. கா. நாகலிங்கம், திரு. கா. கணபதிப்பிள்ளை, திரு. ஆ. சின்னத்தம்பி ஆதியானோர் மருதானைப் புகைவண்டி நிலையத்துக்குச் சென்று கதிர்காம யாத்திரிகர்கள் எல்லோரையும் எதிர்கொண்டழைத்துவந்து, மருதானை "டீன்ஸ்" வீதியில் 108-ம் இலக்கத்தைக் கொண்டதாய் அமைந்திருந்த திரு. சி. வேலுப்பிள்ளை அவர்களின் இல்லத்திலே தங்கியிருக்கச் செய்தார்கள். அவர்களுக்கெல்லாம் உணவும் உறையுளும் அளித்து உபசரித்தார்கள். அடுத்தநாள் அவர்களையெல்லாம் புகைவண்டி நிலையத்துக்கு அழைத்துச் சென்று கதிர்காமம் செல்ல வழியனுப்பி வைத்தார்கள். அந்த ஆண்டில், அவ் வகையிலே கதிர்காமத் திருவிழா முடிவடையும்வரை ஏற்பட்ட செலவுகளையெல்லாம் திரு. நாகலிங்கம் அவர்களே மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள்.

இப்படித் தொடங்கப்பெற்ற அரும் பணி கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வாண்டு "பொன் விழா"க் கொண்டாட வேண்டிய ஆண்டாக மலர்கின்றது என்பது பெருமை கொள்ள வேண்டியதொரு நிகழ்ச்சியாகும்.

அடுத்து வந்த 1926-ம் ஆண்டு யூலாய் மாதம் 31-ம் தேதியன்று, இந்தப் பணி தொடர்ந்து நிகழ்ந்து வருவதற்கு வழி

கோலி வைத்தல் வேண்டும் என்னும் நோக்கத்துடன் அன்று பணியாற்றி வந்தோர் ஒரு நிறுவனத்தை அமைத்துக் கொண்டார்கள். 64/1, போபஸ் வீதியில் அமைந்திருந்த இல்லத்தில் அன்று கூடிய பேரவையில், திருவாளர்கள். சி. வேலுப்பிள்ளை, க. சி. சந்திரசேகரம்பிள்ளை, க. ஞானச்செல்வம், த. சுப்பையா, நா. கா. நாகலிங்கம், க. மயில்வாகனம், மு. முத்துத்தம்பி, சி. செல்லப்பா, நா. அமிர்தலிங்கம், க. வைத்தியலிங்கம், வ. சி. விசுவலிங்கம், ஆ. சின்னத்தம்பி, வை. பொன்னுச்சாமி, வை. சின்னத்துரை, தா. வல்லிபுரம், கா. கணபதிப்பிள்ளை, நா. சோமசுந்தரம், சீ. துரையப்பா, மூ. சுப்பையா, நா. அருணாசலம், வே. இளையதம்பி ஆகியோரைக் கொண்ட ஆட்சிக்குழு நிறுவப்பட்டது. சபைக்கான ஒழுங்கு விதிகளும் வகுத்தமைக்கப்பட்டன. அச் சபையின் தலைவராகச் சேர். அருணாசலம் மகாதேவா அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். சபையானது, ''கொழும்பு, கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை'' என்னும் பெயருடன் தொண்டாற்றத் தொடங்கியது.

1926-ம், 1927-ம் ஆண்டுகளில் தலைவராக விளங்கிய திரு. சி. வேலுப்பிள்ளை அவர்களின் இல்லமாய் 64/1, போபஸ் வீதியில் அமைந்திருந்த கட்டத்திலேயே தனிப்பட்ட ஒரு மடுவத்தினை அமைத்து, யாத்திரிகர்களுக்கான வசதிகள் யாவும் செய்தளிக்கப்பட்டன. அதன்பின், 1928-ம் ஆண்டிலேதான் ''கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை'' தனது பணிகளுக்காக போபஸ் வீதியிலுள்ள 60 ல் இலக்க இல்லத்தின வாடகைக்குப் பெற்றுக்கொள்வதாயிற்று. அந்த இல்லமே 1952-ம் ஆண்டு வரை சபையின் அலுவலகமாகவும், கதிர்காமத் திருவிழாக் காலங்களில் யாத்திரிகர்களுக்கான மடாலயமாகவும், ஏனைய நாள்களில் கொழும்பில் வந்து தங்கியிருக்கும் சைவ அன்பர்கள் வசிப்பிடமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

1939-ம் ஆண்டிலே பதின்மூன்றாவது ஆண்டு விழாக் கூட்டம் நடைபெற்றபோது சபையின் ஒழுங்கு விதிகள் மீளவாய்ந்து திருத்தஞ் செய்யப்பட்டன. 1940-ம் ஆண்டிலே மே மாதம் 3-ம் தேதியன்று ''கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை'' யானது, அங்கீகரிக்கப்பட்ட சபையாக அரசாங்கக் கூட்டுளைச் சட்டங்களுக்கமைந்த வகையிலே பதிவு செய்யப்படுவதாயிற்று.

1952-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18-ம் தேதியன்று நடைபெற்றதான சிறப்புப் பேரவைக் கூட்டத்திலே பிரம்மஸ்ரீ இ. இராமநாதக் குருக்கள் முன்மொழிந்ததொரு தீர்மானம், சபையோரால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளபட்டதுமன்றி, சபையின் வரலாற்றிலேயே ஒரு திருப்பத்தை உண்டாக்குவதாயிற்று. சபைக்கென உரிமை பாராட்டத்தக்கபடி ஒரு நிலையான கட்டடம் இன்றியமையாதது என்பதை உணர்ந்த குருக்களவர்கள் திரு. மார்ட்டின் அப்புகாமி ஆகியோருக்குரித்தான காணிகள் சிலவற்றைப் பணஞ்செலுத்தி உடனடியாகக் கொள்வனவு செய்து அக் காணியில் சபைக்கு நிலையான கட்டடமொன்றினை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும் எனக் காட்டியமை சபையோரது உள்ளத்திலே ஒரு புது மலர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் பயனுக, கப்பித்தாவத்தையில் அமைந்த 1/102-ம் இலக்கக் கட்டடமும் காணியும் கொள்விலைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டன. சபைக்கு நிலையான கட்டடமொன்று அமைந்துவிட்டமை உறுப்பினர்க்கெல்லாம் தனி ஊக்கத்தினை அளித்தது. கதிர்காம யாத்திரிகர்களுக்கான தொண்டுகளை மட்டும் அதுவரை செய்துவந்த சபையினர் சைவம் வளர்க்கும் பெரும்பணிகளிலும் ஈடுபடத்தொடங்கினர்.

1953-ம் ஆண்டு தொடக்கம் இக் கட்டடத்தினையே சபையின் அலுவலகமாகவும், கதிர்காமத் திருவிழாக் காலங்களில் மடாலயமாகவும் சபையினர் பயன்படுத்தி வந்தார்கள். கதிர்காமத்துக்குச் செல்லும் யாத்திரிகர்கள் மனநிறைவுடன் வந்து இங்கே தங்கியிருந்து, நீராடி, கடவுளை வணங்கி, உணவருந்தி, மீண்டும் தமது யாத்திரையினைத் தொடர்வதற்கான வசதிகள் யாவும் இக் கட்டடத்திலே செய்தமைக்கப்பட்டன. இந்தக் கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டு நிலையான இடவசதி ஏற்பட்டதுடன், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலான முருகனருட் பாடல்களை முறையாகக் கற்றுப் பாராயணம் செய்ய வசதியளிக்கும் வகையில், புலவர் சிவங். கருணாலய பாண்டியனார் அவர்களை ஆசிரியராகக்கொண்டு பயிற்சி வகுப்புக்கள் நடாத்த ஏற்பாடுகள் செய்தமைக்கப் பட்டமையைச் சிறப்பாக எடுத்துக் கூறுமலிருக்கமுடியாது. நால்வர் குருபூசைகள் கொண்டாடப்பட்டன. சமயச் சொற்பொழிவுகள் ஒழுங்கு செய்து நிகழ்த்தப் பெற்று வந்தன. கந்தஷஷ்டி, திருக்கார்த்திகை ஆகிய புண்ணிய நாட்களிலே ஸ்ரீபால செல்வவிநாயகர் ஆலயத்தில் இச் சபையினர் முயற்சியால் அரிய சொற்பொழிவுகளும் நிகழ்த்துவிக்கப்பட்டன.

இவற்றுள்ளெல்லாம் பிரதானமாகக் குறிப்பிடப்பட வேண்டியது மடாலயத்திலே கதிர்காமத் திருவிழாக் காலங்களில் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டு வந்த கந்தபுராண படனம் ஆகும். முருகக்கடவுள் வள்ளியம்மையாரைக் கண்டு காதலித்துத் திருமணம் செய்துகொண்ட இடம் கதிர்காமம் என்பது ஐதிகம் எனவே, கதிர்காமத் திருவிழாக் காலங்களில், கந்தபுராணத்திலுள்ள வள்ளியம்மை திருமணப் படலத்தினைப் படித்துப் பயன்சொல்லும் யாழ்ப்பாணத்து வழக்கத்தினை இச் சபை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தி வந்தது. இந்தியாவிலே இல்லாத இவ்வழக்கத்தினை அழிந்தொழிந்து விடாதுபடி யாழ்ப்பாண வாசனை காட்டி வருவது உண்மையிலே பாராட்டப்பட வேண்டியதாகும்.

கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை அமைந்திருக்கும் பிரதேசத்திலே சைவப் பாடசாலையொன்றினை அமைத்தல் வேண்டும், அவ்விடப்பகுதியிலும் அண்மைப் பகுதிகளிலும் வாழும் சைவ மக்கள் தங்கள் இளஞ் சிறார்களைச் சைவப் பண்பாடு சாரத் தக்கதாக அமைந்ததொரு பாடசாலையிலே கல்வி கற்பிக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்தமைத்தல் வேண்டும் எனச் சபையினர் ஆவல் கொண்டார்கள். அவர்களின் அயரா முயற்சியினால், 1954-ம் ஆண்டு சனவரி மாதம் 25-ம் தேதியன்று சைவப் பாடசாலையொன்று உருவாகியது. அக் காலத்தில் மாநகர சபை முதல்வராக விளங்கிய திரு. த. உருத்திரா அவர்கள், "தொண்டர் வித்தியாலயம்" எனப் பெயர் சூட்டி அப் பாடசாலையினைத் தொடக்கி வைத்தார்கள். பாடசாலைக்கு வேண்டிய தளபாடங்களையெல்லாம் செய்விப்பதற்காக அக் காலத்திலே சபை உறுப்பினர் ஆர்வத்துடன் முயன்றமையை எவரும் மறக்கமுடியாது. சபையின் தொடக்க காலத்திலிருந்தே ஆடியோடி அரும்பணிகள் ஆற்றியும், தலைவராகவும் செயலாளராகவும், பொருளாளராகவும் மாறி மாறி அயராதுழைத்தும் சபையின் ஆக்கத்தையே மனத்திற் கொண்டு "பம்பரம்" போற் சுழன்ற திரு. ஆ சின்னத்தம்பி அவர்களையும், அவர்களை நிழல் போலத் தொடர்ந்து பல சாதனைகளைச் செய்துதவிய திரு. வை. பொன்னுச்சாமி அவர்களையும் தமிழ்ச் சைவ மக்கள் "தொண்டர் வித்தியாலயம்" தொடர்பாகச் சிந்தனைசெய்யும் போதெல்லாம் போற்றத் தவறமாட்டார்கள். அவர்களது அயரா முயற்சியினாலேதான் ஓர் ஆண்டுக்கிடையிலேயே - வித்தியாலயத்தின் விருத்தியினை நோக்கி – அரசாங்கம் "தொண்டர் வித்தியாலய"த்துக்கு உதவியளிக்க முன் வந்தது. உதவியும் அளிக்கத்தொடங்கியது.

வித்தியாலயம் தொடங்கப்பெற்ற காலந் தொடங்கி அரசாங்க உதவி கிடைக்கப் பெறும்வரை கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையே பணியாற்றிய ஆசிரியர்களுக்கான சம்பளத்தையும் வழங்கி வருவதாயிற்று. கதிர்காமத் திருவிழாக் காலங்களில், பாடசாலை விடுமுறையின்போது, பாடசாலைக் கட்டடம் கல்வி அமைச்சின் அனுமதியுடன் மடாலயமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அரிதின் முயன்று உருவாக்கியமைக்கப்பட்ட இந்தப் பாடசாலை 1963-ம் ஆண்டிலே அரசாங்கத்தினுற் கையேற்கப்பட்டது.

பாடசாலை அமைத்ததுடன் இச் சபை வாளாவிருக்கவில்லை. பாடசாலையிலே கல்வி பயிலும் மாணவர்களை அழைத்து, ஞாயிற்றுகிழமைகள் தோறும் அவர்களுக்குச் சமயக் கல்வி, ஒழுக்கமுறை, வழிபாட்டு முறை ஆகியவற்றைப் போதித்து அவர்களை நெறிப்படுத்துவதைத் தலையாய பணியாகக் கருதி உழைத்து வருவதாயிற்று. மாணவர்களுக்குப் பேச்சு வன்மை கைவரும் வகையிலே பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வந்தன. மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலே தேவாரப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பெற்று, போட்டியிலே முதலாவதாகத் தெரிவு செய்யப்படுவோருக்குத் "தங்கப் பதக்கம்" பரிசாக வழங்கவும் சபையினராலேயே ஏற்பாடுகள் செய்தமைக்கப்பட்டன.

1965-ம் ஆண்டிலே கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையினர், ஸ்ரீபால செல்வவிநாயகமூர்த்தி கோவிலுக்குரியதும், கோயில் வீதியில் 3-ம் இலக்கத்திலுள்ளதுமான 50 "பேர்ச்" காணியினைக் குத்தகைக்குப் பெற்று நிலையான கட்டடத்தினைக் கட்டி முடித்தமையினையும் யாம் குறிப்பிடாமலிருக்க முடியாது.

திசைமாராமத்துக்கும் கதிர்காமத்துக்கும் நடுவணுகப் "போகப்பலாசை" எனப்படும் இடத்திலே, கதிர்காம யாத்திரிகர்களுக்கு வசதி செய்தளிப்பதற்காக, திரு. க. வே. அப்பாக்குட்டி அவர்கள் இச் சபையின் உதவியுடனும் வேறு சைவ அன்பர்கள் பலரது உதவியுடனும் தண்ணீர்ப் பந்தல் ஒன்றினை நடத்திவந்தார்கள். அவர்களின் ஆற்றிவந்த அரும் பணி செவ்வனே நடைபெறத்தக்கதாக, 1939-ம் ஆண்டு ஓகத்து மாதம் 21-ம் தேதியன்று, இச் சபையினர் அரசாங்கத்துக்குரியதான அரை ஏக்கர்ப் பரப்புள்ள காணியினை விலைக்குக் கொள்வனவுசெய்து, அக் காணியிலேயே இந்தத் தண்ணீர்ப் பந்தல் நடாத்தும் பணி செவ்வனே இயலுவதற்கான வழிவகைகளைச் செய்தளித்தமையையும் யாம் மறக்க முடியாது.

திசைமாராமத்திலிருந்து கதிர்காமத்துக்குச் செல்லும் பாதையினைச் செம்மை பெற்ற பாதையாக அமைத்துத் தரும்படி இச் சபையினர் வேண்டிக்கொண்டதற்கிணங்கி, 1936-ம் ஆண்டிலே அரசாங்கம் வீதியொன்றினை அமைத்தளித்தது. மோட்டோர் வாகனப் போக்குவரத்து ஏற்பட்டமை காரணமாகவும், சிறந்த வீதி அமைக்கப்பெற்றுவிட்டமை காரணமாகவும், அத் தண்ணீர்ப் பந்தலின் பயன்பாடு குன்றியமையால் அத் தொண்டு இப்போது கைவிடப்பட்டுவிட்டது.

மாத்துறையில் வாழ்ந்து வர்த்தகம் புரிந்த தமிழ்ச் சைவமக்கள், மாத்துறையிலே யாத்திரிகர்கள் தங்கியிருக்கவும், இளைப்பாறவும், உணவருந்தவும் பயன்படத்தக்கதான மடம் ஒன்றினை, மாத்துறைப் புகைவண்டி நிலைய வீதியில் அமைந்திருக்கும் 15-ம் இலக்க இல்லத்தில் நிறுவி ஆண்டுதோறும் பணிபுரிந்து வந்தார்கள். 1958-ம் ஆண்டு தொடக்கம் இந்தப் பணி கைவிடப்பட்டுவிட்டது. எனவே மடத்தின் உரிமையாளர் அனுமதியுடனும், மாத்துறை வாழ் சைவ அன்பர்களது ஆதரவுடனும், இச் சபையே 1959-ம் ஆண்டு தொடக்கம் அன்னதானச் சேவையினை நடாத்தி வருகின்றது. அம் மடத்தின் பயன்

பாடும், அன்னதானச் சேவையின் மகத்து வமும் சைவத் தமிழ் மக்கள் என்றும் மறக்க முடியாதவை.

“கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை'' இன்று விரிவுபெற்றுப் பல துறை களிலும் பணியாற்றும் பான்மை வாய்ந் ததாய் மலர்ச்சிபெற்று விளங்குவதைக் காண ஒரே வியப்பாக இருக்கின்றது. தொடக்க காலத்திலே “கதிர்காம யாத் திரிகர் தொண்டர் சபை'' எனப் பெயர் கொண்டெழுந்த இச் சபையினை யாம் நாளடைவில்''கதிர்காமத் தொண்டர் சபை'' எனவே வழங்கத் தலைப்பட்டோம். இன்றோ, இத் தெய்வப் பணி ஆற்றும் சபையினை - அதன் பணிச் சிறப்பினை நோக்கி - “தொண்டர் சபை'' எனக் குறித்துச் சுட்டி வழங்கும் நிலை ஏற்பட்டி ருக்கின்றமை காண்கின்றோம். ஐம்பது ஆண்டுகளாக அரும்பணி ஆற்றி வரும் இச் சபையின் மாட்சியே மாட்சி!

திருக்கேதீச்சரம் ஈழ நாட்டிலே பழம் பெருமை வாய்ந்த திருத்தலமாகும். அத் திருத்தலம் பாடல் பெற்ற சிறப்பினை உடையது. அந்தத் திருத்தலத்திலே நடை பெறும் சிவராத்திரி விழா பல்லாயிரக் கணக்கான அடியவர்களை ஒரே காலத்தில் அங்கே கூடி வணக்கஞ் செலுத்த வைப்ப தனை யாம் எல்லோரும் அறிவோம். அங்கே திரண்டு வரும் பக்த கோடிகளுக் கெல்லாம் அன்னதானம் வழங்கும் அரும் பணியிலும் இச் சபை பெருமளவுக்குப் பங்குகொண்டு வருகின்றது. உதவி நல்கி வருகின்றது. திருக்கேதீஸ்வரத்தில் நிறுவப் பட்டிருக்கும் சிவானந்த குருகுலத்திலே நடாத்தப் பெற்றுவந்த குருக்கள்மார் பயிற்சி வகுப்பிலே சேர்ந்து பயிலும் மாணவர் செலவுக்கெனக்கூட இச் சபை உதவி செய்துகொண்டிருந்தது. மட்டக் களப்பிலே இராமகிருஷ்ண மடத்தினரால் நடத்தப்பெற்று வரும் அனாதைகள் இல்லத் திலே சேர்ந்த பயிற்சிபெறும் பிள்ளைகளுள் ஒரு பிள்ளைக்கான செலவினை மூன்று ஆண்டுகள்வரை அந் நிலையத்தினருக்கு இச் சபை வழங்கி வருவதாயிற்று. ஸ்ரீபால செல்வ விநாயக மூர்த்தி ஆலயத் திருப் பணிக்கும் தன்னாலான உதவிகளை இச் சபை அளித்துவருகிறது.

இப்படிக்கொத்த அரும்பணிகளை ஐம் பது ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆற்றி வரும் நிறுவனத்தின் வரலாற்றினை நோக் கும்போது மறக்கவே முடியாத சிலர் எமது மனத் திரையிலே தோன்றுகிறார் கள். முருகன் திருவருளாலேதான் இப் பணி இயன்றுவருகின்றது என்பது உண் மையேயானாலும், இந் நிறுவனச் சூத்தி ரத்தை இயக்கிவந்த பெரியார்களை யாம் போற்றாமலிருக்க முடியாது. அவர்கள் தன்னலமும் பதவி வேட்கையும் சாராத வகையில் இத் தெய்வத் திருத்தொண் டினை அன்றுதொட்டு ஆற்றி வந்தார்கள் என்பதை எவரேனும் மறக்கவோ மறைக் கவோ மாட்டார்கள்.

இச் சபையில் நெடுங்காலமாகத் தலைவர் பதவியினை வகுத்து, சபையின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குச் சேர். அருணாசலம் மகாதேவா அவர்கள் ஆற்றிய அளப்பரும் சேவையினை யாம் நினைவுகூராமல் இருக்கமுடியாது. கதிர் காமத்துக்குச் செல்லும் யாத்திரிகள் பிர யாண வசதியற்று அவலப்பட்டுக்கொண்டி ருந்தமையைக் கேள்வியுற்று, அவர்கள் அடிக்கடி மாத்துறை சென்று யாத்திரிகர் களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற் படுத்தியமை இன்றும் எமது நினைவில் இருக்கிறது. மாத்துறையிலிருந்து திசை மாராமம்வரை செல்வதற்குச் செவ்வை யான வசுச் சேவையொன்றினை அவர்களே அக் காலத்தில் ஒப்பந்த வகையில் ஒழுங்கு செய்து கொடுத்தார்கள். ‘போகப் பலாசை'' என்னும் இடத்தில் அமைக் கப்பட்டிருந்த தண்ணீர்ப் பந்தல் வசதி யினைச் சிலர் தகர்த்தழிக்க முயன்றபோது, சேர். அருணாசலம் மகாதேவா அவர்களே நேரிற்சென்று, பார்வையிட்டு, உடனடி யாக அரசாங்கத்துக்குரியதான அரை ஏக் கர்க் காணியினை இச் சபையின்வாயிலாகக்

கொள்வனவு செய்துகொள்ள வழிகோலி ஞர்கள் என்பதையும் யாம் என்றுமே மறக்க முடியாது.

அடுத்தபடியாக எமது மனக்கண்முன் தோற்றம் அளிப்பவர் திரு. க. கனகரத்தி னம் அவர்கள். அவர்களை அறியாதவர்களே இருக்கமாட்டார்கள். யான் கொழும்புக்கு முதன்முதலாக வந்த காலத்தில் அவர்களை எல்லோரும் ''ஐயா'' எனவே அன்புடன் குறிப்பிட்டு வந்தார்கள். உண்மையில், அவர்களும் தந்தையுரிமை காட்டி எல் லோரையும் அன்புடன் வரவேற்று உதவி கள் புரிந்து வந்தமையால், ''ஐயா''ப் பட்டம் அவர்களுக்குப் பொருத்தமான தாய் அமைந்துவிட்டது. ''ஐயா'' இல்லாத சங்கம் இல்லை, சபை இல்லை, கழகம் இல்லை, மன்றம் இல்லை என்னும் நிலை அக் காலத் காலத்தில் ஏற்பட்டிருந்தது. ''ஐயா'' வைச் சுற்றி அக் காலத்திலே ஒரு கூட் டம் அவரைச் சுற்றி வளைத்து ஆடிக் கொண்டிருந்தது. தமிழ், சைவம், இசை, நாடகம், நாட்டியம் தொடர்புபட்ட எந்த நிகழ்ச்சியும் திரு. கனகரத்தினம் அவர்கள் இல்லாமல் இந்தப் பெரிய கொழும்பு நகரத்திலே நடந்ததை அக் காலத்திலே யான் காணவில்லை. இலக்கிய நிகழ்ச்சிகளிலேகூட அவர்களுக்கு முதல் இடம் வழங்கப்பட்டு வந்தது. கொழும்பு விவேகானந்த சபை, கொழும்புத் தமிழ்ச் சங்கம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை ஆகிய நிறுவனங்களிலெல்லாம் ஒரு தனித் தலைவராக விளங்கியவர் அவர்.

தலைவராய் இருந்தால்மட்டும் போதும் என்ற மனநிலை படைத்தவர்கள் வரிசை யிலே சேராதவர் அவர். அக் காரணத்தி னாலே தாம் ஈடுபடும் எந்த நிறுவனத்தி லும் மிகுந்த ஆர்வத்துடன் சாதாரண மனிதனுகவே உலாவி உழைத்து வந்தவர். அவர்கள் தொட்ட காரியங்களிலெல்லாம் அவரைச் சுற்றி இயங்கிய கூட்டமும் சேர்ந்து அயராது உழைத்து வந்தமையை யான் அறிவேன். அக் காரணத்தினாலோ என்னவோ, அவர்கள் தொட்டதெல்லாம் அபிவிருத்திபெற்றுக் கொண்டே வந்தது. இப்படிக்கொத்த பெருமை வாய்ந்த திரு. கனகரத்தினம் அவர்கள் இச் சபை தொடங்கப்பெற்ற காலந்தொடங்கியே தோன்றாத் துணையாய்ச் சபையின் பணிகள் நிறைவேறுவதற்காக ஆர்வத்துடன் உழைத்து வந்தார்கள். அவரைப் பின் தொடர்ந்து அவருடைய கூட்டத்தினரும் உழைத்து வந்தார்கள்.

''தொண்டர் வித்தியாலயம்'' அமைக் கப்பட்ட காலந் தொடக்கம் அதன் வளர்ச்சியிலே ஊக்கங்காட்டி வந்தவர், கல்வி அமைச்சராகப் பதவியேற்ற வேளை யிலே யாது செய்திருப்பார் என்பதை யாம் எடுத்துக் கூற வேண்டியதில்லை. அவர் களது பேருதவியினால்தான் வித்தியாலயம் 1955-ம் ஆண்டிலே அரசாங்க உதவி பெறுவதாயிற்று. அவர்கள் சிறிது காலம் வரை வித்தியாலய மேலாளராகவும் பணி யாற்றியதுண்டு. அவரை யாம் என்றும் மறக்க முடியாது.

அவர்களைப்போலவே வித்தியாலய மேலாளர்களாக விளங்கி, அதன் வளர்ச் சியிலேயே அல்லும் பகலும் ஆர்வங்காட்டி உழைத்து வந்த வைத்திய கலாநிதி. கு. திருவிளங்கம் அவர்களையும், திரு. வ. அரிய ரத்தினம் அவர்களையும், சபையினர் மட்டு மல்ல, கொழும்பு வாழ் சைவப்பெருமக்க ளும் என்றும் போற்றக் கடமைப்பட்டி ருக்கிறார்கள்.

மக்களுள்ளே ''ஆபரணங்''களாகவும் ''மாணிக்கங்''களாகவும் சிலரை யாம் குறித்துச் சுட்டுவதுண்டு. மதிப்பதுண்டு. அங்ஙனமாக யாம் மதிக்கும் ஓர் ஆபரணம், திரு. க. மதியாபரணம் அவர்கள் ஆவார். மாந்தருக்குள் ஒரு மாணிக்கம் என, தொண்டின் விழுப்பம் காணுந் தகைமை சாரப்பெறாத யாமும் மனத்தகத்தே இன் னும் வைத்துப் போற்றுபவர் அவர். திரு. கனகரத்தினம் அவர்களைப்போல, கொழும் பிலுள்ள சைவத் தமிழ் நிறுவனங்களி லெல்லாம் பங்குகொண்டு உழைத்தவர்

அவர். பணம்பற்றி நினைக்கும்போதெல்லாம், அவர்களது சிரித்த முகமும் கூசிப் பார்க்கின்ற பார்வையும் அள்ளிக் கொடுக்கின்ற கையுந்தான் என்றும் நினைவில் வரும். அவர்களுடன் சேர்ந்து பல நிறுவனங்களிலே - பணம் கொடுக்காமலே - பணியாற்றி வந்த பேறு எனக்குக் கிடைத்தது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் யான் செயலாளனுகப் பணியாற்றிக்கொண்டிருந்த வேளையிலே அச் சங்கத்துக்கு ஒரு நிலையான கட்டடம் அமைப்பதற்காக முயன்றதுண்டு. அந்த முயற்சியின் தொடர்பாக ஒரு களியாட்ட விழா நடாத்துவதற்கு முயன்ருேம். அதற்கும் பணம் வேண்டும் அல்லவா? தலையைச் சொறிந்தோம் திரு. மதியாபரணம் அவர்கள், ''என்ன, தலையைச் சொறிகிறீர்கள்?... பணம் தேவையானுல், யான் தருகிறேன். பின் பணந் திரட்டிய பின் திருப்பித் தாருங்கள்''. என்று கூறிப் பத்தாயிரம் ரூபா அப் பணிக்காக வழங்கினுர்.

கொழும்பு விவேகானந்த சபையினர், கட்டடத்துடன் சேர்த்து ரூபா. 80,000/- பெறுமதியான காணியினை விலைக்கு வாங்கிக்கொள்ள முயன்றபோது, அக் கொள்வனவுக்கான முற்பணத்தை வழங்கி ஊக்கமளித்தமை ''மதியாபரண மாண்பு'' காட்டுவதாகும். அக் காலத்திலே அவர்கள் அப் பணவுதவி செய்யாதிருந்தால், அச் சபையினர் சபையையடுத்திருந்த காணியினைக் கொள்வனவு செய்ய இயலாதிருந்திருக்கும். விவேகானந்த சபையே அவர் பெருமை கூறும்.

கதிர்காமத் திருவிழாக் காலங்களிலே அன்னதானம் செய்வதற்காகப் பட்டியல்கள் வாயிலாகவே பணம் சேகரிப்பதுண்டு. அங்ஙனம் சேகரிக்கும் வேளைகளிலும் நிதி சேகரிப்பதில் அவர்கள் காட்டிவந்த ஊக்கம் போற்றப்படவேண்டியதாகும். சபையின் முயற்சிகளுக்கு அவர்கள் அளித்து வந்த பேருதவிகளை மதித்து, அவர்கள் சிவனடி சார்ந்தபோது, சபையினர் திருமுறைப் பதிகத்தினை நினைவு மலராக வெளியிட்டு இரங்கற் கூட்டமொன்றினை நடாத்தியமை சபையினர் அவர்கள்பாற் கொண்டிருந்த பெருமதிப்பினை எடுத்துக் காட்டுவதாகும்,

'' கூட்டுப் பிரார்த்தனை'' என்றவுடன் எவருக்கும் திரு. எம். எஸ். திருவிளங்கம் என்ற பெயரே நினைவுக்கு வரும். இப் பிரார்த்தனை முறையினை எமது நாட்டிலே பரப்பிய பெருமை இருவரைச் சாரும். ஒருவர், கொழும்பிலே பிரபல வர்த்தகத் தாபனங்கள் சிலவற்றின் உரிமையாளராய்த் திரு. கே. வி. சுந்தரம் என விளங்கிக்கொண்டிருந்து இப்போது துறவு நிலை மேற்கொண்டு மதுரை ஆதீனகர்த்தராக வீற்றிருக்கும் திருப்பெருந் திரு. சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவர். மற்றையவர், இலங்கை அரசின் திறைசேரியில் உதவிக் கட்டுப்பாட்டதிகாரியாக விளங்கிய திரு. திருவிளங்கம் அவர்கள் ஆவர். அவர்கள் ஒரு காலத்திலே நாடகத்துறையிலும் பெரும் பணி ஆற்றியதுடன், தாமே பாகங்கள் சிலவற்றை ஏற்று நடித்து வந்ததும் உண்டு. கொழும்பிலே நடைபெறும் சமயப் பணிகள் யாவற்றிலும் திரு. க. கனகரத்தினம் அவர்களுடன் கூடி ஈடுபட்டு, '' சின்ன ஐயா '' என்ற இடத்தைப் பிடித்துக்கொண்டவர். அவர்கள், கொழும்பு விவேகானந்த சபையில் மட்டுமன்றி, கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டுப் பல ஆண்டுகளாக அயராது பணிசெய்து வந்தவர். அவர்களையும் தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள்.

இவ்வளவும் சபையின் ஆக்கத்துக்காக அயராது உழைத்துவந்த சிவனடி சார்ந்தோரை நினைவுகொண்டோம். சபை தொடங்கப்பெற்ற காலந்தொடங்கியே அரும்பணி ஆற்றிக்கொண்டு வந்து, இன்றும் அயராது சபை மேற்கொள்ளுகின்ற

பணிகளுக்கெல்லாம் ஆதரவு நல்கி வருகின்ற பெரியோர்களை யார் யாரென நோக்குவோம்.

யான் கொழும்புக்கு முதன்முதலாக வந்த காலத்திலே கதிர்காமத்தைப்பற்றி ஆங்கிலத்திலே இருவர் எழுதிய நூல்களைப் பெற்றுப் படித்திருக்கிறேன். ஒன்று, சேர். பொன்னம்பலம் அருணசலம் அவர்கள் " The Worship of Muruga " என எழுதிய நூலாகும். அதனை திரு. அ. க. இளைய தம்பி என்பார் தமிழில் மொழிபெயர்த்து "கதிர்காம வேலவர்" என்னும் பெயருடன் வெளியிட்டிருந்ததனையும் அக்காலத்திலே யான் பார்த்ததுண்டு. மற்றையது, இலங்கைத் தமிழர் வரலாற்றுக்கும், சிறப்பாக யாழ்ப்பாண வரலாற்றுக்கும் வேறு எவரும் இன்றுவரை ஆற்றாத பெரும்பணி ஆற்றிவந்த முதலியார், திரு. சி. இராசநாயகம் அவர்கள் எழுதி வெளியிட்டிருந்த " Kataragama " என்னும் நூலாகும்.

சேர். பொன்னம்பலம் அருணசலம் அவர்கள் கதிர்காமத்திலே ஈடுபாடு காட்டியதைத் தொடர்ந்து அவர்கள் அரும் புதல்வரான சேர். அருணசலம் மகாதேவா அவர்கள் கதிர்காமப் பணிகளிலே ஈடுபட்டதைப்போல, முதலியார் சி. இராசநாயகம் அவர்கள் கதிர்காமத்திலே ஈடுபாடு காட்டியதைத் தொடர்ந்து கதிர்காமப் பணிகளிலெல்லாம் சபையின் தொடக்க காலந்தொட்டே ஈடுபட்டிருப்பவர், அவர்களின் அரும் புதல்வரான கேணல் திரு. இராச. சபாநாயகம் C. B. E., J. P. அவர்களாவர். அவர்கள் பெயரினை அவர்கள் பெருமை நோக்கி, யான் "இராச சபாநாயகம்" என வழங்குகின்றேன்.

திரு. இராச. சபாநாயகம் அவர்கள் இச் சபையின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றி வந்தவர். சைவத்தையும் தமிழையும் தமது கண்களாகப் போற்றி வளர்க்கும் நெறிகளுக்கெல்லாம் வரையறையின்றிப் பண உதவியளித்து வருபவர். சைவ சித்தாந்தத்திலே மிகுந்த பற்றுடையவர். இச் சபையினர் மடாலயத்திலே நடாத்திவந்த "கந்தரனுபூதி" வகுப்பு முடிவடைந்ததும், கந்தரனுபூதியினை உரையுடன் அச்சிட்டு வெளிப்படுத்திய பெருமை அவர்களையே சாரும். கதிர்காமத் திருவிழாக் காலங்களிலே மடாலயத்தில் "கந்தபுராண வள்ளியம்மை திருமணப் படலம்" படனம் நடைபெறும்போதெல்லாம் நாள்தோறும் வந்திருந்து அவர்கள் அளித்த ஆதரவினை யாம் என்றும் மறக்க முடியாது. கந்தசஷ்டி விரத காலங்களிலே ஸ்ரீ பால செல்வ விநாயகர் திருக்கோயிலிலே நடைபெற்றுவந்த பிரசங்கங்களுக்கும் தலைமைவகித்து அவற்றைச் சிறப்பித்த பெருமையும் அவர்களுக்கு உண்டு. சமயப் பிரசங்கங்கள், ஆலயங்களிலும் மடாலயங்களிலும் அடிக்கடி நடைபெறுதல் வேண்டும் என வலியுறுத்திவந்தமையாலேதான் கோயிலிலும் மடாலயத்திலும் விரிவுரைகளும் பிரசங்கங்களும் இச் சபையினரால் ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டுவந்தன. விவேகானந்த சபையின் தலைவராக அவர்கள் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்திலேதான் அங்கும் விரிவுரைகளும் பிரசங்கங்களும் மிகுதியாக நிகழ்ந்தன. இவைகள் யாவற்றிலும் யாம் சிறப்பாகக் குறிப்பிடவேண்டியது, அவர்கள் தலைவராக இருந்த காலத்திலேதான், இச் சபைக்கான கட்டடம் கட்டி முடிக்கப் பெற்றது என்பதாகும். அவர்கள் மேலும் தொடர்ந்து அரும் பணிகள் ஆற்றும் வகையில் அவர்களுக்குப் பல்லாண்டு அருளும் வண்ணம் யாம் முருகனை வேண்டுகின்றோம்.

அரசாங்க சேவையிலே உயர் பதவிகளில் அமர்ந்திருப்போர் மட்டுமன்றிச் சாதாரண பதவிகளில் இருப்போரும், எந்த வேளையிலும் ஏவுதற் கருத்தாக்களாக இருப்பதையன்றி இயற்றுதற் கருத்தாக்களாக இருப்பதை விரும்புவதில்லை. யாராவது பண உதவியும் பிற வசதிகளும் செய்துவர, பிறரை ஏவிப் பணியாற்றும்படி கூறிவிட்டு, மேற்பார்வை செய்வதே எமது பணியாகக் கொள்ளும் மனப்பான்மை எம்மிடையே வேரூன்றிவிட்டது

அந்த மனப்பான்மை காரணமாக அரும் பெரும் சேவை புரிந்து வருவோரையே அறியாது. சில வேளைகளில் யாம் அலட்சியம் செய்து மறந்துவிடுகிறோம்.

அந்த மனப்பான்மையுடனே, எத்தனையோ ஆண்டுகளாக இத் 'தொண்டர்' களுடனே கூடிக் கொழும்பில் வாழ்ந்து கொண்டிருந்தும், தமிழ், சைவ, சமூகப் பணிகள் நிகழும் இடங்களிலெல்லாம் அமைதியாக உலாவிக் கலந்துகொள்வதை அடிக்கடி கண்டிருந்தும், "யான் நேரிலே என்றும் சந்தித்துக் கதைத்தோ அளவளாவியோ கொள்ளாத" ஒருவரைப்பற்றி இங்கே எடுத்துக்கூற விரும்புகின்றேன். அவர்களைப்பற்றி எடுத்துக்கூறுமல் விடுவேனுயின், சபையின் பணிகள் பற்றிய விருத்தாந்தங்களை அறியாதவன் எனவே மதிக்கக்கப்படுவேன். உண்மையில், 'இவர்தான் அவர்' என்று இதுவரை அறிந்துகொள்ளாதமைக்காக வெட்கமடைகின்றேன். "இப்படியும் தொண்டர்கள் இருப்பார்கள்!" என்று இப்போதுதான் உணர்கின்றேன்.

அவர்கள் எனக்கே ஒரு "பாடம்" படிப்பித்துவிட்டார்கள். எனக்கு மாத்திரமல்ல, எத்தனையோ பேருக்குப் "பாடம்" படிப்பித்து வருகிறுர்கள். அவர்கள்தான் "லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்" என, "சிந்தனையின் கருவூலம்" ஒன்றினை வகுத்தமைத்து அச்சேற்றி வெளியிட்டு "கலண்டர்" வெளியிடுவோர் எல்லோருக்கும் வழிகாட்டியாகவும் முன்னேடியாகவும் விளங்கிவரும் திரு. ச. த. சின்னத்துரை, ஜே. பி. அவர்கள் ஆவார். உலகம் முழுவதையும் எத்தனையோ முறை சுற்றி வந்த வண. தனிநாயக அடிகள், "லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் நாட்காட்டியைப் போன்றதொன்றை உலகின் வேறெந்த நாட்டிலும் நான் கண்டதில்லை .....எல்லாச் சமயத்தவர்க்கும், எல்லா இனத்தாருக்கும், எல்லா நாட்டாருக்கும் பயன்படும் முறையில் தொகுக்கப்பெற்ற இந்த நாட்காட்டியை ஒரு நூல் நிலையம் எனக் கூறினுலும் மிகையாகாது. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற வள்ளுவரின் கருத்தை அடிப்படையாகக்கொண்ட இந்த தொகை நூலை ஒவ்வொரு நாளும் பார்ப்பதாலும் படிப்பதாலும், நம் தமிழ் பேசும் மக்களிடம் நற்பண்பும் பரந்த மனப்பான்மையும் உயர்ந்த கோட்பாடுகளும் வேரூன்றி வளரும் என்பதில் ஐயமில்லை" என அறைந்து கூறுகிறுர்கள். தொண்டை மண்டலம் மெய்கண்டார் ஆதீனக் குருமகா சந்நிதானம் சிவத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமசாரிய சுவாமிகள் அவர்களோ, "சிந்தனையில் அழுந்திப் பற்பல ஆராய்ந்து சிறந்தனவும் மறைந்தனவும் மறந்த யாவும் எந்த மதப் பெரியரது சால்பும், நாட்டின் இயல்பு கலை, நாகரிகம், தொழில், விஞ்ஞானம் தந்தனவும் தந்த சின்னத்துரை வேள்" எனத் திரு. சின்னத்துரை அவர்களைப் பாராட்டி, "சிந்தனைச் சிற்பச் செல்வர்" என அவர்களுக்குப் பட்டஞ்சூட்டியமையையும் யாம் அறிவோம். இப்படிக் கொத்த திரு. சின்னத்துரை அவர்கள்தான் அந்த "ஒருவர்" என்பதை இப்போது அறிந்துகொண்டேன்.

திரு. சின்னத்துரை அவர்கள் சாதாரண கடைச் சிப்பந்தியாகவே - யான் அறியாக் காலத்தில் - கொழும்புக்கு வந்தவர். தமது இடையரு முயற்சியாலே உயர்ந்தவர். அற நெறியிலே பணம் ஈட்டியவர். தாம் ஈட்டிய பணத்தின் ஒரு பகுதியினை, விளம்பரம் செய்யாமலே தரும காரியங்களுக்காகவும் செலவிட்டு வருகிறுர். தாமாகவே முயன்று பயின்று, தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் - "எழுத்தாளன்" என்று சொல்லாமலே - "எழுத்தாளர்" ஏற்றுப் போற்றும் வகையில் எழுதும் வன்மை பெற்று விளங்குகின்றுர். "பலதும் பத்தும்" என்னும் பெயருடன் அவர்கள் எழுதி, பன்னூறு பக்கங்கள் கொண்டதாய் அச்சேற்றி

வரும் பாரிய நூலின் ஒரு பகுதியினை அண்மையிலே யான் காண நேர்ந்தது. அதைக் கண்டதும், "கலைக் களஞ்சியங்" களும், யானும் 'பிச்சை கேட்டு'க்-'காப்பி' யடிக்க வசதியேற்படப்போகிறது என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. யாத்திரை மேற்கொள்வோர் தாமும் எப்பொழுதும் கையிலே கொண்டுசெல்லவேண்டியதாக அந் நூல்அமைந்திருப்பதை யான் கவனித்தேன். கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபைக்கு அவர்கள் நெடுங்காலமாக ஆற்றிவரும் பணி, சபையின் பணி இன்று பரந்து விரிந்து தமிழ்ச்-சைவப்-பணியாக மலர்ந் திருப்பது போலவே மலர்ந்து வளர்ந்து வருவதைக் காண்கின்றேன். அவர்களது அரிய தொண்டுகள் தொடர்ந்து நிகழத் தக்கபடி கதிர்காம முருகன் அவர்களுக் குப் பல்லாண்டு அருளுவார் என்பதில் ஐயமில்லை.

சபை மேற்கொண்ட பணிகள் யாவற் றிலும் தோள் கொடுத்து அயராது உழைத்து, தாம் உழைப்பதனையே உணர்த் தாமல் அமைதியானதொரு முறையில் இயங்கிவந்த திரு. ஈசுரபாதம் அவர்களை யும், டாக்டர். சி. சரவணமுத்து அவர்க ளையும், அவர்கள் பண்பறிந்து பாராட்ட வேண்டியது எமது கடனாகும். அமைதி யாகப் பணியாற்றுவோர் எமது கண் களுக்குத் தெரியாமலே சில வேளைகளிலே போய் விடுவதுண்டு. ஓர் ஆண்டிலே தவறி னாலும் அடுத்த ஆண்டிலே அவர்கள் கட்டாயம் அகப்பட்டே தீருவார்கள் அடுத்த ஆண்டு அல்ல, தொடர்ந்து பல ஆண்டுகளாக இச்சபையின் தொண்டுக ளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வரும் இவர் களை மறப்பது எப்படி?

கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையினர் கொழும்பிலே தொடங்கி நடாத்திவந்த அரும்பணிபோல, மாத் துறையிலே அக் காலத்திலே வர்த்தகம் புரிந்துகொண்டிருந்த பெரு மக்கள் சில ரும் பணியாற்றிவந்ததுண்டு. அத் தொண் டின் விழுப்பத்தினைக் காட்டும் சான்றாக மாத்துறைப் புகைவண்டி நிலைய வீதியில் "கதிர்காம மடம்" இன்றும் விளங்குகின் றது. இம் மடத்தினை அமைத்துப் பணி யாற்றி வருவதைக் கண்டதும், இச் சபை யினரும் மனமுவந்து தம் பணிகளை மாத் துறைக்கும் பரவி நிலவச் செய்தார்கள். இச்சபையினரின் சேவை ஏறக்குறைய 1959-ம் ஆண்டு தொடக்கம் அம் மடத்தி னருக்குக் கிடைப்பதாயிற்று. கடந்த 40 ஆண்டுக் காலமாக இவ்வரிய "மாத் துறை – கதிர்காம மடம்" சேவை புரிவ தற்குத் காரணராய் அமைந்த பெரியார் கொக்குவில், திரு. இ. சி. சி. அருணாசலம் அவர்களே என்பதைப் பலர் அறியார்கள். யான் கதிர்காமம் செல்லும்போதெல்லாம் அவர்கள் ஆற்றிவந்த அளப்பரிய சேவை யினைப் பெற்றுக் களைப்பாறி வந்தமைக் காகவாவது ஒரு "வார்த்தை" சொல்ல வேண்டுமல்லவா? மாத்துறையிலே கதிர் காம யாத்திரிகர் தொண்டர் சபையினர் தமது சபைத் தொண்டர்களைச் சூத்திரப் பாவைகளை இயக்குவதுபோல இயக்கி வந்தார்கள். தொண்டர்களும் மனமுவந்து தொண்டாற்றிச் சுழன்று கொண்டிருந் தார்கள். எங்களுக்காகக் "குனிந்து ஒரு தும்பு எடுக்கக்கூட" மனங்கொள்ளாத பலர், ஆண்டுதோறும் இச் சபையினர் தொழும்புகளை மாத்துறையிலே - குனிந்து வளைந்து, ஓடியாடி, கூச்சமில்லாமல்–அடி யார் பணி செய்துகொண்டிருந்தார்கள். கொழும்பிலிருந்து மாத்துறைக்கு உண வளிப்பதற்கு வேண்டிய பொருள்களையும் ஆட்களையும் "வான்" வண்டி மூலமாகவும் 'கார்'"கள் மூலமாகவும் அனுப்பிக் கொண்டிருந்தமையை - அவைகளை அனுப் பிக்கொண்டிருந்தோருடன் சேர்த்து–யான் போற்றுகின்றேன். அரசினர் படைகளுக் குப் பயிற்சி அளிப்பதுபோல, சபையினர் இந்தத் "தொண்டர் படை"யினருக்கு எங்ஙனம் பயிற்சி அளித்தார்களோ அறி

யேன். இம் மாத்துறையிலே, அரசபடையினைச் சார்ந்த ஒருவர் - திரு. இ. திருநாவுக்கரசு – கடந்த 20 ஆண்டுக்காலமாக இத் ''தொண்டர் படை''யிலும் பயிற்சிப் பெற்றுப் பணியாற்றி வருகிறார்கள்.

இங்ஙனமாகப் பயிற்சிப் பெற்றுப் பணியாற்றி வருபவர்களுள்ளே மாத்துறையில் அன்னதானமளிக்கும் பெருந்தொண்டிலே ஈடுபாடுகாட்டி. அயராது கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே பணியாற்றி வருகின்றவர்களுக்குள்ளே திரு. செல்லப்பா நடராசா அவர்களையும் திரு. பாலசுந்தரம் அவர்களையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். செல்வர்கள் என்றும் ஏழைகள் எளியவர்கள் என்றும் வேறுபாடு சிறிதும் காட்டாமல் எல்லோரையும் யாத்திரிகள் என மட்டும் கொண்டு இயலுகின்ற மனப்பான்மை இத் ''தொண்டர்''களுக்கு எப்படி ஏற்பட்டது என்பதுதான் எனக்குத் தெரியாத புதிராய் இருக்கின்றது.

இவ்வளவு பணிகளையெல்லாம் புரியத் தக்கப்படி பணந்திரட்டி, கணக்குகளை ஒழுங்குற அமைப்பதற்குத் திறயையும் நேர்மையும் மிக்கவராய் ''ஒருவர்'' தேவையல்லவா? அந்த முயற்சியிலும் சபையினர் வெற்றி கண்டுவிட்டார்கள் என்பதை யான் கூறித்தான் ஆகவேண்டும். இச் சபையின் கணக்குகளையெல்லாம் செவ்வியதொரு முறையிலே வகுத்துத் தொகுத்து வைப்பதற்காக ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொருவரைத் தெரிவு கொள்ளுதல் வேண்டும். அப்படித் தெரிவு செய்யும் போது கடந்த பல ஆண்டுகளாகவே அடுத்தடுத்துப் பொருளாளராக ஒருவர் மீண்டும் மீண்டும் தெரிவு செய்யபட்டு வந்திருக்கிறார். காரணம் யாதாயிருக்கலாம்? பொருளாளர், பணம் படைத்தவராயும், பணம் திரட்ட தக்கவராயும், திரட்டிய பணத்தினைத் திறமறிந்து செலவுசெய்ய வழிவகுக்கும் வன்மை படைத்தவராயும், நேர்மையும் நிதானமும் மிக்கவராயும் இருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. திரு. த. நடேஸ்வரன் அவர்களே அங்ஙனமாகச் சபைக்குக் கிடைத்த பொருளாளர். எல்லாம் நிறைந்தவர். அந்தப் பொருளாளரின் தகைமையினை அறிந்தவர்கள் அறிவார்கள். அவர்களது விடா முயற்சியாலும் அடக்கமான கண்காணிப்பாலும் பணம் பெருகுகிறது. சபையின் பணிகள் ஓங்கி வளருகின்றன. சைவம் தழைக்கின்றது. அவர் நீடு வாழ்க.

கதிர்காமத் திருவிழாக் காலங்களில் சபையின் மடலாயத்திலே முருகக் கடவுளுக்கான பூசை ஆராதனைகளைச் செவ்வனே நடாத்திவரும் ஸ்ரீபால செல்வ விநாயகர் திருக்கோயிற் பிரதம குருக்கள் சிவத்திரு. பா. சண்முகரத்தின சர்மா அவர்களுக்கும், சபையினர் மட்டுமல்ல, இடையிடை தரிசனத்துக்காகச் சென்று வரும் யாமும் பல்லாண்டு கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். பூசை வேளைகளிலும், புராணபடன வேளைகளிலும் அவர்கள் காட்டிவரும் ஆர்வத்துக்குச் சைவமக்கள் எல்லோருமே நன்றி செலுத்தவேண்டியவராவர்.

இப்படியாக, ஐம்பது ஆண்டுகள் அரும்பணி ஆற்றிவரும் ஒரு நிறுவனம்- ''பொன் விழா''க் காணும் இவ்வேளையிலே - தான் இயற்றிவந்த பணிகளை ஒரு முறை நினைவுகூறுதல் இன்றியமையாதது. அந்த நினைவுகூறுதலுக்கு ஓரளவுக்கு உதவக்கூடியது இச்சிறிய கட்டுரை. அகலாதும் அணுகாதும் '' தீக் காய்வார்போல''! இருந்து யான் அறிந்தவற்றை எடுத்துக் கூறியிருக்கிறேன். அருளால் இச்சபை மேலும் வளர்ந்து பணியாற்றுவதாக எனப் பல்லாண்டு கூறுகிறேன்.

முற்றும்.

உ
சிவமயம்

# ஐம்பது ஆண்டு நிறைவு விழா

எம் கடன் பணிசெய்து கிடப்பதே.

**கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபை, கொழும்பு**

பொன் விழாக் கொண்டாட்ட

# அறிவித்தல்

நிகழும் இராக்ஷத வருடம் பங்குனி மாதம் 8-ம் நாள்
( 21-3-76 ) ஞாயிற்றுக்கிழமை
மருதானை ( கப்பித்தாவத்தை ) நிர். 3, கோவில் வீதியிலுள்ள
சபை மண்டபத்தில் மாலை 5-00 மணிக்கு
பொன் விழா நடைபெறும்

## நிகழ்ச்சி நிரல்

1. தலைமையுரை :-

   **திரு. நா. முத்தையா அவர்கள்**
   ( அதிபர், ஆத்மஜோதி நிலையம் )

2. சபைத் தலைவர்களின் படங்கள் திரைநீக்கம் செய்தல் :-

   **திரு. சி. ரெங்கநாதன் Q. C. அவர்கள்**

3. 50 வருட சேவை பற்றிய ஆண்டு மலர் வெளியிடுதல் :-

   தென் புலோலியூர் பெரும்புலவர்
   **மு. கணபதிப்பிள்ளை அவர்கள்**

4. சிறப்புரை :-

   **எம். கே. செல்வராசா J.P.U.M. அவர்கள்**
   சட்டத்தரணி, கோணேஸ்வர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர்

5. கதாகாலட்சேபம் :- " ஸ்ரீ வள்ளி திருமணம் "

   நவரச பாவாக் அமிர்த பூஷணம்
   **பிரம்மஸ்ரீ மு ராம சுப்பிரமணிய சர்மா அவர்கள்**
   சங்கீத கதா காலட்சேபம் செய்வார்கள்.

6. பக்கவாத்தியம் :

| | | |
|---|---|---|
| திரு. | என். சீனிவாசன் | — பின்னணி இசை |
| ,, | ரி. எஸ். சிட்டிபாபு | — ஹார்மோனியம் |
| ,, | எம். பத்மநாதன் | — மிருதங்கம் |
| திருமதி | ஆர். மைதிலி | — சுருதி |

7. நன்றியுரை

   **கு. குருசுவாமி**
   சமயச் செயலாளர், பொன் விழாச் சபையினருக்காக

க. ஈசுரபாதம்,
கௌரவ பொதுச்செயலாளர்

3, கோவில் வீதி, கொழும்பு-10.
17-3-76

உ

# தொண்டர்தம் பெருமை

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே."

— ஔவையார் —

# சபைத் தொண்டர்கள்



இடமிருந்து வலம் இருப்பவர்கள்: வித்துவான் இ. சி. சோதிநாதன் ஜே.பி. (செயற்குழு) க. ஈசுரபாதம் (செயலாளர்) க. கனகசிங்கம் (உப தலைவர்) கேர்னல் சபாநாயகம் ஜே. பி., ஓ. பி. ஈ. (உப தலைவர்) ஆ. சின்னத்தம்பி ஜே.பி. (தலைவர்) ச. த. சின்னத்துரை ஜே. பி. (உப தலைவர்) டாக்டர் சி. சரவணமுத்து (உப தலைவர்) வை. பொன்னுச்சாமி (உப தலைவர்) த. நடேஸ்வரன் (பொருளாளர்)

இடமிருந்து வலம் நிற்பவர்கள்: இ. ஆறுமுகம் (செயற்குழு) இ. முருகையா (செயற்குழு) செல்லப்பா நடராசா (செயற்குழு) அ. சிவசுப்பிரமணியம் (உதவி மட பரிபாலகர்) மு. கணேசபிள்ளை (உதவி செயலாளர்) வே. சுப்பிரமணியம் (செயற்குழு) இ திருநாவுக்கரசு (செயற்குழு) வே. வல்லிபுரம் (செயற்குழு) சி. கந்தசாமி (செயற்குழு) ம. அ. தம்பிராசா (செயற்குழு) சி. பாலசுந்தரம் (உதவித் தனதிகாரி) செ. நாகராசா (மட பரிபாலகர்)

**சமூகம் கொடுக்காதவர்கள் :-**

க. நாகேந்திரா (உப தலைவர்) கு. குருசாமி (சமயச் செயலாளர்) ஆ. விமலச்சந்திரா (செயற்குழு) த. அமிர்தானந்தர் (செயற்குழு) ச. புஷ்பநாதன் (செயற்குழு) ந. த. துரைராசா (செயற்குழு) க. கனகசபை (செயற்குழு) இ. இராசநாயகம் (செயற்குழு) து. இராஜேஸ்வரன் (செயற்குழு)

## தலைவர்


| | | | | |
|---|---|---|---|---|
| சேர். அருணாசலம் மகாதேவா | 1926 | முதல் | 1939 | வரை |
| அதிகார் ஆ. செல்லமுத்து | 1940 | | 1941 | |
| சேர். அருணாசலம் மகாதேவா | 1942 | முதல் | 1945 | வரை |
| திரு. க. கனகரத்தினம் | 1946 | முதல் | 1953 | வரை |
| திரு. க. மதியாபரணம் | 1954 | முதல் | 1957 | வரை |
| திரு. ஆ. சின்னத்தம்பி | 1958 | | 1959 | |
| கேணல். சபாநாயகம் | 1959 | முதல் | 1974 | வரை |
| திரு. ஆ. சின்னத்தம்பி | 1975 | முதல் | | |

## செயலாளர்


| | |
|---|---|
| திரு. க. ஞானச்செல்வம் | 1926 — 1932 |
| திரு. ஆ. சின்னத்தம்பி | 1933 — |
| திரு. த. சுப்பையா | 1934 — 1935 |
| திரு. ஆ. சின்னத்தம்பி | 1936 — 1938 |
| திரு. க. ஞானச்செல்வம் | 1939 — |
| திரு. ஆ. சின்னத்தம்பி | 1940 — 1946 |
| திரு. வி. நல்லசேகரம்பிள்ளை | 1947 — 1949 |
| திரு. சி. இராமநாதன் | 1950 — 1951 |
| திரு. வே. மயில்வாகனம் | 1952 — 1957 |
| திரு ஐ. இராமநாதன் | 1958 — 1959 |
| திரு.மு.க.கனகரத்தினம் M.S.C. | 1960 — 1962 |
| திரு. க. ஏரம்பமூர்த்தி | 1963 — 1966 |
| திரு. க. ஈசுரபாதம் | 1967 — 1970 |
| திரு ஆ. விமலச்சந்திரா | 1971 — |
| திரு. க ஈசுரபாதம் | 1972 — |
| திரு. ஆ. விமலச்சந்திரா | 1973 — 1974 |
| திரு. க. ஈசுரபாதம் | 1975 — |

## பொருளாளர்

| | |
|---|---|
| திரு. கா. நாகலிங்கம் | 1926 — 1930 |
| திரு வே. த. சுப்பையாபிள்ளை | 1931 — 1933 |
| திரு. ஆ. சின்னத்தம்பி | 1934 — 1935 |
| திரு. க. செல்லப்பா | 1935 — 1938 |
| திரு. வே. தி. சுப்பையாபிள்ளை | 1939 — 1940 |
| திரு. வி. நல்லசேகரம்பிள்ளை | 1941 — 1943 |
| திரு. பொ. கனகரத்தினம் | 1944 — 1945 |
| திரு. ஐ. இராமநாதன் | 1946 — |
| திரு. பொ. கனகரத்தினம் | 1947 — |
| திரு. சு. பொன்னையாபிள்ளை | 1948 — 1951 |
| திரு. வ. சின்னத்துரை | 1952 — |
| திரு. க. ஈசுரபாதம் | 1953 — |
| திரு. வ. சின்னத்துரை | 1954 — 1956 |
| திரு. க. ஈசுரபாதம் | 1957 — |
| கேணல். இரா. சபாநாயகம் | 1958 — |
| திரு. க. சிதம்பரப்பிள்ளை | 1959 — |
| திரு. த. சொக்கநாதன் | 1960 — |
| திரு. வை. பொன்னுச்சாமி | 1961 — 1962 |
| திரு. த. நடேஸ்வரன் | 1963 — |





எமது தலைமைச் செயலகமும் மடாலயமும்




எமது மடாலயத்தில், கதிர்காம உற்சவ காலத்தில் வருடா வருடம் நடைபெறும் வள்ளி திருமணம் புராண படன நிகழ்ச்சி

வாசிப்பவர்: திரு. ஆறுமுகம் அவர்கள்

உரை சொல்பவர்: சிவஞானவாரி திரு. குருசுவாமி அவர்கள்



மாத்துறை புகையிரத நிலைய வீதியில் அமைந்திருக்கும் கதிர்காம யாத்திரிகர் தங்கிச் செல்லும் மடம். இங்கு அன்னதானம் வருடாவருடம் நடைபெறுகிறது.



**எமது மடாலயத்தில் கதிர்காம உற்சவகாலத்தில் முருகனுக்கு நடைபெறும் பூஜை நிகழ்ச்சி.**

பூசை செய்பவர்: பிரம்மஸ்ரீ ச. ராதா குருக்கள் அவர்கள்
வழிபடுபவர்: சிவஞானவாரிதி திரு. குருசாமி அவர்கள்
நெறிப்படுத்துபவர்: சிந்தனைச்சிற்பச்செல்வர் ச. த. சின்னத்துரை, ஜே. பி. அவர்கள்



**எமது மடத்தில் கதிர்காம உற்சவ காலத்தில் வருடாவருடம் நிகழும் அன்னதானக் காட்சி**

# கதிர்காம மூர்த்தி

முன்னர்க் காலத்து வாயுவினாலே பறித்து — எறியப்பட்ட கொடுமுடி மூன்றனு ளொன்றாய், தக்கிண கயிலை, பொன்னகரம். ஈழம் முதலிய பற்பல பெயர்களை யுடைத்தாய், சூரபன்மன், இராவணன், குபேரன், மது, உக்கிரவழுதி, விபீடணன், தொண்டைமானிளந்திரையன், நல்லியக் கோடன், குளக்கோடன், உக்கிரசோழன், வாலசிங்கன், சிங்கையாரினன், அரசகேசரி, பரராச சேகரன், செகராச சேகரன் முதலிய பலப்பல அரசராலாளப்பட்டதாய், சிவாகமம், புராணம், மிருதி, தமிழ் வேதத் திருவருட்பா, இதிகாசம் முதலிய நூல்களினுஞ் சங்க நூல்களினும் ஆங்காங்கே புகழப்பட்டதாகி, விராட் புருடனுக்கு இடை நாடியாய், திரிகூடம், கேதீச்சரம், கந்தமாதனம். ஏமகூடம், நீலம் சுவேலம், சிவனொளிபாதம், செங்கடகம், வள்ளி, காளபைரவம், நகுலம், மேந்தலை, மகானுவரம், சீவர்த்தனம், உகந்தை, கதிரை முதலிய மலைகளையும், மாவலி கங்கை, கருட கங்கை, காவிரி கங்கை, மாணிக்க கங்கை, பாலாவி, பாப நாசம், நவ கங்கை, மாயவனாறு, கழுநீர்க் கங்கை, வேலாயுத புட்கரணி, கன்னியா கங்கை, நகுலம், சமுத்திர தீர்த்தம், பாதலக கங்கை, கல்லாறு, நவகிரி திருவடிநிலை, யமுனாரி, நிலாவரி, வாமனம் முதலிய தீர்த்தங்களையும் பற்பல தலங்களையு முடையதாய் விளங்குவது இலங்கை மண்டலமேயாம்.

இத்தகைய இலங்கை சூரபன் மன்றன் மகேந்திரபுரிக்கு வடக்கேயுள்ளது. எவ்வாறெனிற் கூறுவதும். இந்த சமுத்திரமென விப்போது வழங்கப்படும் மகேந்திரக் கடலின் நடுவே எண்பதினாயிரம் யோசனை யகலமும் நூறு யோசனை விஸ்தீரணமுடையதோர் நகரைச் செய்வித்து. அதன் எட்டுத் திக்குகளினும் ஏமபுரம், தேவபுரம், இலங்காபுரம், நீலபுரம், சுவேதபுரம் முதலிய எட்டு நகரங்களையும் புரிவித்து அவற்றிற் கசானனன் (யானைமுகன்) துரங்காசியன் (குதிரை முகன்) யாளிவத்திரன் (யாளிமுகன்) பல்லூக வத்திரன் (கரடி முகன்) வியாக்கிரானன் (புலிமுகன்) வராக துண்டன் (பன்றி முகன்) சிங்க வத்திரன் (சிங்க முகன்) கவயாசியன் (காட்டுப் பசு முகன்) என்னும் வீரர்களைக் காவல் வைத்தானென்று கந்தபுராணங் கூறல் காண்க.

இங்ஙனம் வீரமகேந்திரபுரிக்கு வடக்கு வாயிலினுள்ளதாகி விளங்கும் இலங்கையின் தென்கோடியிலே விளங்குவது கதிரை என்னுங் கதிர்காமத் தலமேயாம். இத்தல மாகாத்மியங்கள் யாவும் அவனருள்பெற்ற ஆன்றோ ரெடுத்துரைப்பதன்றிப் புழுத்த நாயினுங் கடையேனாகிய யானெடுத்துரைக்கப் புகுதனகையென்பது சத்தியம். ஆயினும் என்மனத்தவா வென்வயப் படாதியன்றவா றுரைத்தியென்று பிடர்பிடித் துந்தலா னெழுந்தனன். இத்தலத்தின் மகிமைகளெல்லாங் கந்தபுராணம் மகேந்திர யுத்த காண்டங்களினும், பிரமாண்டபுராணம் தல மாகாத்மியத் துங்கூறப்பட்டன அன்றி, விசேடமாக மற்சபுராணம், தக்கிண கைலாச மான்மியத்திலே அம்சுகாமாசல மான்மியத்திலுமகலமாயறைப்பட்டுள்ளன. ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் கிளியுருவெடுத்துப் பலதலங்கள் தோறுந் தரிசித்துப் போந்தருளியகாலை இத்தலத்தும் உபய கதிர்காமத்தும் எழுந்தருளித் திருப்புகழ் பாடித் தோத்திரம் புரிந் தருள்பெற்றார். அது ''கிளிப் பாடு பூதியில் வருவோனே'' என வித்தலத்திருப்புகழிற் கூறியருளியதனாலும் பெறுதும். அது பற்றி வன்னி மங்களம் என்னுஞ் சிறப்புப் பெயருள்ளது.

திருப்படை வீட்டுத் தலங்களாகிய திருப்பரங்குன்ற முதலிய ஆறாதார தலங்

களினும் மேலாய துவாதசாந்தத் தல
மாய் விளங்குவது. அன்றியும், சிவதலங்
களிலேயே கோயில் என்னும் சிதம்பரம்
ஆகாய லிங்கமுடைத்தாம் இரகசியத்
தலமானதுபோல, இஃது மங்ஙனே சோதி
வடிவரா யெவரானும் விரும்பத் தகுந்த
பரவியோம மூர்த்தி, எவர்களானுங் காண
டற்கு அரியராய் விளங்கலினிரகசியத் தல
மாய் விளங்கும். அஃ திற்றை ஞான்றும்
பிரத்தியக்ஷமாகக் காணலாம். ஆகலின்,
உலகின்கணுள்ள தலங்கள் எல்லாவற்றி
னும் மேலாயதிது. இங்ஙனுள்ள தீர்த்தங்
களோ மாணிக்க கங்கை முதலாக அள
வற்றன. மலைகளோ கதிரை மலை, வள்ளி
மலை, தெய்வயானை மலை, காளபைரவ
மலை முதலாக வெண்ணிலாதன்.
மூர்த்திகளோ சுப்பிரமணிய சிவ கணேச
உமா வீர பைரவ மகாசாத்த நவ லக்க
வீர புட்கலோ ராமகாளிய சுராரி துர்க்க
முதலிய பலப்பலருளர். அவர்க ளெல்
லாஞ் சுப்பிரமணியக் கடவுளை யுபாசித்து
நாற்புறங்களினும் வசித்துளார்.

இத்தலத்திற்குத் தக்கிண கந்தபுரி,
ஏமகூடம் அம்சுகாமம், கதிலர கதிர்கா
மம், பூலோக கந்தபுரி, கோட்டம், வன்னி
மங்கலம், காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்
த்திவாசல், சகல தேவோ பாஷியம். கதிர்
கேணி, சகல சித்திரம், அகத்தியப்பிரியம்,
சிதாகாசம், குகத்தலம் தகராலயம், பிரம
சித்து, மகத்து, விவிக்தும், ககனம், பரிசுத்
தம், அற்புதம், பரசறை, அம்பலம், பாலி
யோமம் இரண்யகோசம், அந்தராகாசம்
அவ்வியத்த மூர்த்தபுரி முதலிய பலப்பல
திருநாமங்களையுடையது. இங்கே குமாரக்
கடவுள் கணப்போதும் நீங்காதிருந்து
(இச்சா சத்தி, கிரியா சத்திகளாகிய வள்
ளியம்மையார் தெய்வயானை அம்மையாருட
னமர்ந்து பற்பல திவ்வியாற்புத திருவிளை
யாடல்களைச் செய்தருள்வார். தேவர் முத
லிய கணர்கள் இப்போதும் பூசை செய்
வது அன்பர்க்குத் தெரிய வருகின்றது.

முன்னே சூரபன்மன் இதற்கருகிலு
ள்ள தன் மகேந்திர புரியில் தேவர்களை
யுஞ் சயந்தனையுஞ் சிறையிட, அதனை மீட்
டற்காக எழுந்தருளிய சுப்பிரமணியக்
கடவுள் திருக்கயிலையினின்றும் இலக்கத்
தொன்பது வீரர்களும் இரண்டாயிரம்
பூதவெள்ளங்களுந் தம்மைச்சூழப் புறப்பட்
டுத் தாரகற்கொன்று திருச்செந்தில் அமர்
ந்து, சூரபன்மன் முதலாயினோர் தம் வரலா
றுகளையெலாம் வாக்குத் தலைவனான தேவ
குருவாம் வியாழனிடங் கேட்பார் போலக்
கேட்டருளிக் கடல்வழியாகப் போந்து
அதனைக்கடந்து இலங்கை மலையைத்
தாண்டி தென்கோடியை யடுத்தகாலை
பிரம விட்டிணு வந்து பணிந்து
(பரம் பொருளே! இதோ சூரபன்
மனிடம் மகேந்திரம். ஆண்டசுர
நீசர்கள் செறிதலால் தேவரீர் போதல்
தகுதியன்று என்ன, கதிரைவேற் கடவு
ளும் தெய்வக் கம்மியனான விசுவகருமனைத்
திருநோக்கஞ் செய்தருளி ஓர் நகரமைத்தி
விரைவி னென்றருள, அவனும் பலப்பல
மண்டபங்களோடு கூடியதும், உன்னத
கோபுரங்களால் விளங்கப்பெற்றதும் நடு
வணே ஸ்ரீ கந்தக் கடவுளின் திருக்கோ
யிலா வலங்கரிக்கப் பெற்றதும். பலப்பல
வீதிகள் செறியப்பட்டதும், மாற்றுயர்ந்த
ஏமத்தால் (தங்கத்தினால்) அமைக்கப்பட்
டதுமான ஏக கூடமென்னும் ஓர் நகரஞ்
செய்தனன். அதன்கண் பெருமானார் எழுந்
தருளியிருந்து போர் புரிந்து அவரைத்
தொலைத்துத் தேவர்களைச் சிறைமீட்டு
மகேந்திரபுரியை வருணராசற்குக் கொடுத்
தருளி வடகோடிக் கட் பரிதிபுரத்துள்ள
(ஆம்பரத்துறை) உத்தர கதிர்காமம். உபய
கதிர்காம மெனப்படும் புதுச் சந்நிதியில்
தங்கி வீற்றிருந்து பின் தம் * மகேந்திர
மலையைக்கடந்து இலங்கை மலைகளையுங்
கடலினையுந் தாண்டித் திருச்சிரலைவாய்
சென்றருளின ரென்றது. ஆகலின்
பாசறை கதிர்காமமே, அது. வட
மொழிக் கந்த புராணம் வீரமா மகேந்
திரகாண்டம் ஏழாவது அத்தியாயம்
21-வது சுலோகம் முதல் 48-வது சுலோ
கம் வரையும் உரைக்கப்பட்ட வாற்று
னும். தமிழ்க் கந்தபுராணத்து.

* மகேந்திர மலையென்பது இலங்கையின் தென்மேற்குப் பாகத்தேயுள்ள சப்பிரகாமம் என்ற விடத்திலுள்ள சிவனொளிபாதம் எனப் பெரியோர் கூறுவர்.

## கந்தபுராணம் ஏமகூடப் படலம்

இவ்வகை அயில்வே லண்ண லிராயிரம் பூத வெள்ளங்
கவ்வையி னமைந்து செல்லக் கனைகடல் வரைப்பி னேகி
யெவ்வம தடைந்த தொல்லை யிலங்கையங் குவடு நீங்கி
மைவரை புரைசூர் மேவு மகேந்திர புரமுன் போந்தான்.
காண்டியீது சூரனூர் நடுங்க ணீசர் செறிதலா
லாண்டு சேறன் முறையதன் றதற்கடுத்த வெல்லையா
மீண்டுபாச றைத்தல மியற்றுவித் திருந்தபின்
வேண்டுமாறு புரிதியைய வினையநாடி யென்னவே.
கலங்கல் கொண்டிடு மகேந்திர வரைப்பினைக் கடந்தேபின்
னிலங்கைமாநகர ரொருவியே யளக்கரை யிகந்தேகி
நலங்கொள் சீருடைச் செந்தியிற் றெல்லைமா நகரெய்தி
யலங்க லஞ்சுடர் மஞ்ஞைநின் றிழிந்தன னயில்வே லோன்.

என வருஉஞ் செய்யுட்களால் அறியப்படும். இத்தலத்தே ஏம கூடம் என்னுந் திருக்கோயிலினிடத்தே ஆறு திருமுகங்களும் பதினெட்டுத் திருக் கண்களும். ஆறு திருமுடிகளும் குண்டல நிரைகளும், அழகிய கடப்ப மாலையணிந்த திருமார்பும்: வலத் திருக் கரங்களிலேயே கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபயம் என்பவும். இடத்திருக்கரங்களிலே தாமரை, கண்டா மணி, மழு, தண்டு, வில், வரதம் என்பவும் அமைந்த பன்னிருதிருப் புயங்களும் கொண்டு, கோடி சூரியப் பிரகாசம் போன்ற திருமேனியுடையராய், வேகமூர்த்தியாய். நவவீரர்களும், இலக்கங் கணுதிபர்களும், இரண்டாயிரம் பூத வெள்ளங்களும், தேவர், முனிவர், கின்னரர் முதலாய பதினெண் கணத்தவர்களும் போற்றி வணங்கி யேவல்புரிய வீற்றிருந்தருளினர். அத்திருக் கோலத்தை மானுடராகிய சிறியேம் தரிசித்த லியலாதென்றே மூலத்தான மடைக்கப்பட்டு மூர்த்தியும் அவ்வியத்தமாயினர். கந்த சுவாமி இத்தலத்தை விரும்பி யுறைகின்றூர் என்பது,

"கதிரை நச்சினுனுங் கலசனுமாம் வேத
மதுரை நச்சினுர்க் கினியன் வந்து"

என்ற தொல்காப்பிய வுரைச் சிறப்புப் பாயிரத்தா னுணர்க; கதிர்காமம் என்பது, கதிர் = ஒளி, காமம் = இன்பம் எனப் பொருள் படவே ஆன்மாக்களுக்குச் சிவஞான வொளியினுற் பேரின்பத்தை யளிப்பது எனவும், பரஞ்சுடராகிய கந்தக் கடவுள் விரும்பி யுறைவது எனவும் சொல்வர். அன்றித் துரியப் பொருளாகிய குகஞான மென்னுஞ் சோதி வியாபித்தலானும், குகசாயுச்சியமென்னும் இன்பத்தைக் கொடுத்தலானும் வந்த காரணப் பெயரென்னலுமாம், அது,

### (கதிர் காமத் திருப்புகழ்)

துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதிரையீ றற்றசொற்
சுகசொரு பத்தையுற் றடைவேனே.

என அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதனுலும் பெறுதும். கதிர்-சூரிய சந்திரர்களால், காமம்-விரும்பிப் பூசிக்கப்பட்டதெனவுங் கூறுப. இதன் விரிவெல்லாங் கதிர்காம மான்மியத்துட் கூறியுள்ளாம். ஆண்டுக் காண்க, கதிர்காமம் என்னுஞ் சொல்லே கதிரை என

மரூஉவிற்று. இம்மூர்த்தியின் பெருமையைச், சுப்பிரமணிய தலக்கோவைப் பிள்ளைத் தமிழ்ச் செய்யுலானும் அறிக.

அது வருமாறு:-

மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய
வந்திடும் பூதலத் தோர்
வாயூமர் பாடவுங் குருடர்கண் பார்த்திடவு
மலடிகள்பின் மைந்தர் பெறவுங்
காணிற்கு மாரவே லாவென்று மன்பரைக்
கரடிபுலி யானை சிங்கம்
நாலிற் பணிந்தஞ்சி யோடவுங் கந்தனே
கண்கண்ட தெய்ய மெனவே
யாணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினு
னடியேனை யாண்டு கொண்டெ
ஞுகத்தில் வந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கு
மாறுமுக மெய்த் தெய்வமே
சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிகணவ
செங்கீரை யாடி யருளே
தேவரொடு மனிதர்பணி கதிர்காம வேலனே
செங்கீரை யாடி யருளே.

இக்கடவுள் அருணகிரிநாதரது திருப்புகழ், பொய்யா மொழிப் புலவனுர் கோவை, கதிர்காமக் கலம்பகம் என்னுமிவையிற்றை யேற்றருளிய சரிதங்களும் பிறவும் விரியு மாகலின் விடுத்தாம். இங்ஙனம் ஏமகூடம் என்னுங் கதிர்காமத் தலத்திற் சோதி வடிவராய் வீற்றிருந்து போக பேரின்பங்களை அருளலாற் கதிர்காம மூர்த்தியெனப் பெயர் பெற்ருர்.

கதிர்காம மூர்த்தியே நம.

" சுப்பிரமணிய பாராக்கிரமம் "

## பொன் விழாக் குழு

திரு. ஆ. சின்னத்தம்பி ஜே. பி. (தலைவர்)
திரு. க. ஈசுரபாதம்
திரு. த. நடேஸ்வரன்
திரு. இரா. சபாநாயகம் ஜே. பி.
திரு. ச. த. சின்னத்துரை ஜே. பி.
வித்துவான் இ. சி. சோதிநாதன்
டாக்டர் சி. சரவணமுத்து
திரு. க. கனகசிங்கம்
திரு. வே. சுப்பிரமணியம
திரு. கு. குருசுவாமி (செயலாளர்)

மடாதிபதி

திரு. இ. சிதம்பரநாதன்
திரு. நாகராஜா


# கப்பித்தாவத்தை ஸ்ரீ விநாயகர் கோவிலின் சுவையான வரலாறு

( செல்லப்பா நடராசா )

கப்பித்தாவத்தை பலவகைச் சிறப்புக்களைக் கொண்டது. இங்கேதான் கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையின் தலைமைச் செயலகமும் மடாலயமும் அமைந்துள்ளன. ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி கோவிலும், ஸ்ரீ கைலாசநாத சுவாமி கோவிலும் அமைந்துள்ள பெரும் பதியாகவும் கப்பித்தாவத்தை அமைந்துள்ளது. இன்று இலங்கையில் ஸ்ரீ மகாலட்சுமிக்கெனத் தனிக் கோவில்கொண்ட சிறப்பையும் அது பெற்றிருக்கின்றது. கொழும்பு தொண்டர் வித்தியாலயம் இயங்கிவருவதும் இவ்விடத்திலேயே. இவ்வித பல சிறப்புக்களைக்கொண்ட கப்பித்தாவத்தையில் உள்ள ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி கோவிலைப்பற்றிய சிறப்புக் கட்டுரை இதுவாகும். இதைக் கோவிலின் மகா கும்பாபிஷேக தினமான 1962-ஆம் ஆண்டு மே மாதம் 6-ம் திகதி தினகரன் பிரசுரித்தது.

ஒரு சிறு வாவி. அதன் நடுவே மிகச் சிறிய அழகிய தீவொன்று. சிறிய தீவென்று சொன்னால் சுமார் ஆறு அல்லது ஏழு ஏக்கர் நிலப்பரப்பு அளவுள்ள சிறு தீவு. அங்கே பச்சைப் பசேலென்ற தென்னஞ்சோலை தான் தூரத்துப் பார்வைக்குத் தென்படுகிறது. உள்ளே சென்றால், தென்னஞ்சோலைகளுக்கு மத்தியிலே சிறுசிறு குடிசைகளைக் காண்கிறோம். பாலைப் பொழியும் பசுக்கள் ஏராளமாகத் தம்மிஷ்டப்படி சுற்றித்திரிகின்றன. பசும்புல் வெளிகளுக்கு மத்தியில் சிறுசிறு முற்புதர்களும் காட்சியளிக்கின்றன. அதோ சில முட்புதர்களுக்கு மத்தியில் பாழடைந்த கட்டடமொன்று! அதைப் பார்க்கச் செல்கிறோம். வழியோரமுள்ள ஒரு புதரிலிருந்து இன்னொரு புதருக்குக் கீரிப்பிள்ளையொன்று மின்வெட்டுநேரத்தில் தாவிச் செல்கின்றது. அந்தப் பாழடைந்த சிறு கட்டடத்தில் விக்கினத்தைத் தீர்க்கும் விக்கினேஸ்வரர் விக்கிரகம் ஒன்று காணப்படுகிறது.

பிரமசாரியான விக்கினேஸ்வரருக்கு ஆடம்பரம் எதற்கு? அங்கே அமைதியாகக் குடியிருக்கிறார். தலையில் மூன்று தரம்குட்டி, விநாயகரை கும்பிடுகிறோம். தீவை மேலும் நமது கண்கள் நோட்டமிடுகின்றன. சுற்றிவரவுள்ள குளத்திற் பலர் நீராடிக் கொண்டிருக்கிறார்கள். விநாயகரை வழிபடுவதற்கு முன்னேற்பாடாகத்தான். சிலர் நீராடிவிட்டு அனுட்டானம் பார்க்கிறார்கள். கூலியாக இரண்டு சதம் கொடுத்துத் தோணிகளில் அக்கரையிலிருந்து விநாயகராலயத்தை நோக்கிப் பலர் வந்துகொண்டிருப்பதும் தெரிகிறது.



ஸ்ரீ பால செல்வ விநாயக மூர்த்தி கோவில் தோற்றம்

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் ...

மாயக்கதைகளிலே வரும் தீவொன்றைப் பற்றி இங்கு நான் வர்ணிக்கவில்லை. இலங்கையில், அதுவும் தலைநகரில் இருந்த இன்றும் இருக்கின்ற ஒரு தலத்தைப் பற்றியே இங்கு கூறுகிறேன். மருதானை கப்பித்தாவத்தையிலிருக்கின்ற விநாயகர் ஆலயம் இற்றைக்குச் சுமார் நூற்றைம்பது வருடங்களுக்குமுன் நான் வருணித்த சூழலிலே இருந்துள்ளது. நாற்புறமும் வாவியாற் சூழப்பட்டிருந்த இந்த விநாயகராலயமே கொழும்பிலுள்ள அதி ஆதியான இந்துக்கள் வழிபாட்டுத் தலமெனக் கருதப்படுகிறது. இந்த ஆலயத்துக்கு அன்று கொழும்புவாழ் நகர வைதீக இந்துக் குடிமக்களனைவரும் தமது விரத அனுட்டானங்களின் பொருட்டுத் தோணிகளில் வந்து போவார்களாம். புறக்கோட்டையில் அன்று வணிகர்களாயிருந்த தமிழ் மக்களும் இக்கோயிலுக்கே விரத அனுட்டானங்களின் பொருட்டு வருவதுண்டாம். குறிப்பாக ஆடி அமாவாசை போன்ற முக்கிய தினங்களில் குளத்தில் நீராடவும், கோவில் தரிசனம் செய்யவும், விரதமனுட்டிக்கவும் ஏராளமானோர் இங்கு வரும் வழக்கமும் அன்று இருந்திருக்கிறது.

இன்றுகூடப் பலரால் தீவுக்கோவிலென்றே அழைக்கப்படும் இக்கோவிலின் ஆரம்பகாலமெதுவெனத் திட்டவட்டமாகத் தெரியவில்லை. அந்நியரின் அட்டகாசங்களுக்குக் கூட இவ்வாலயம், கொழும்பில் அதுவும் துறைமுகத்திற்கு அருகிலே தப்பிப் பிழைத்ததென்றால், அது இவ்வாலயத்தில் குடிகொண்டிருக்கும் விநாயகப் பெருமானது பெருமையென்றே கூற வேண்டும்.

இன்றுள்ள கொழும்பு மக்கலம் வீதி 1911-ம் ஆண்டளவிலேயே அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வீதியின் ஒரு பகுதியும் புகையிரத இலாகாவின் தற்போதைய இந்திய பண்டகசாலைப் பகுதியும் அன்று இக்கோவிலைச் சுற்றிருந்த குளத்தின் சிறு பகுதிகளே. குளமும் படிப்படியாக நிரவப்பட்டு இன்றைய அமைப்பைக் கப்பித்தாவத்தைக் கோவிற் சுற்றுடல் பெறுமுன், தற்போதைய காமினிப் படமாளிகைக்குப் பின்னால் இருந்த பாதையொன்று நேரே இன்றைய தொழில் நுட்பக் கல்லூரிப் பக்கமாகச் சென்றதாகத் தெரிகிறது. அன்றைய கொழும்பிற்கும் இன்றைய கொழும்பிற்கும் தான் எவ்வளவு வித்தியாசம்! கப்பித்தாவத்தையின் சரித்திர மூலம் கொழும்பின் சரித்திரத்தையும் ஓரளவு அறிய முடியும். இன்று கப்பித்தாவத்தைக்குச் செல்பவர்கள், அன்று குளமத்தியிலிருந்த சிறு தீவொன்றின் கோவிலா இதுவென்றே நம்பமாட்டார்கள். அன்றைய சேறும் சகதியுமான குளமே காரை சிமெந்தினாற் கட்டப்பட்ட இன்றைய பேரையாறு. துறைமுகப்பண்ட ஏற்றுமதி இறக்குமதிக்குச் சௌகரியமாகச் செய்யப்பட்ட மாற்றங்கள், பண்டைக் குளத்தை முற்றாக உருக்குலைத்துவிட்டன வென்றே கூறவேண்டும். ஏன், குளத்தை நிரவிக்கட்டப்பட்ட பிரமாண்டமான மாளிகைதானே இன்றைய ''தினகரன்'' பத்திரிகாலயம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிவன் பூதப்பர் வழங்கிய காணி

மாசி மாதம் முதலாம் தேதி 1817-ம் ஆண்டு சிவன் பூதப்பர் என்ற பெருமகன் சுமார் ஐந்தரை ஏக்கர் காணியை இக்கோவிலுக்குத் தருமசாதனம் செய்த உறுதிகூட இன்றுள்ளது. இவரது தருமசாதன உறுதிப்படி கோவிற் சொத்துக் எவரும் விற்கவோ ஈடுவைக்கவோ முடியாது. சொத்து மூலம் கிடைக்கக்கூடிய வரும்படி கோவில் பராமரிப்புக்கே செலவிடப்பட வேண்டும். உறுதியில் கப்பித்தாவத்தை ''கப்டின்ஸ் காடின்ஸ்'' என்றே அழைக்கப்படுகிறது. இக்கோவிற் காணிகளுக்கருகாமையில் யாரோ கப்டன் ஒருவரது சிறு நிலபுலங்களும் அந்தக் காலத்திலிருந்தனவென்றும், அக்கப்டனது தோட்டமெனவே இப்பகுதி அழைக்கப்பட்டதெனவும், பிறிதொரு வரலாறு

கூறுகிறது. சிவன் பூதப்பர் ஐந்தரை ஏக்கர் காணியைத் தருமசாதனம் செய்த பொழுது, நரகரி வெங்கடராமையர் என்பவர் கோவிலின் பிரதம குருவாக இருந்திருக்கிருர். இன்றும் செல்வவிநாயக மூர்த்தி கோவிலென்ற பெயருடனேயே இவ்வாலயம் அழைக்கப்பட்டுள்ள விவரம் உறுதியில் காணப்படுகிறது. 1842-ம் ஆண்டில் ஆறுபேர் கொண்ட முதலாவது தர்மகர்த்தாக்கள் சபையொன்று இக்கோவில் பராமரிப்புக்கென அமைக்கப்பட்டது. இந்தச் சபையைச் சேர்ந்த கடைசித் தர்மகர்த்தா 1900 ஆண்டுவரை இருந்திருக்கிருர். இதற்கிடையில் நரகரியும் காலமாகிவிட்டார்.

கோவில் நிலப்பரப்பில் சில பகுதிகளைப் புகையிரத இலாகாவினதும் மக்கலம் வீதியினதும் விஸ்தரிப்புக்கென 1909-ம் ஆண்டில் அரசாங்கம் சுவீகரித்தது. அப்பொழுது கோவில் பராமரிப்புக்கெனத் தர்மகர்த்தாக்கள் எவரும் இராததால் அரசாங்கம் தான் சுவீகரித்த நிலத்திற்கான நட்டஈட்டுப்பணத்தை நீதித்தலத்தில் கட்டியது. இப்பணத்தைத் தாம் பெற அப்பொழுது அர்ச்சகர்களாக இருந்தவர்களிற் சிலர் விரும்பினர். ஆனல் கோவிலில் வழிபடுவோர் இதை ஆட்சேபித்தனர். விவகாரம் கோடுவரை சென்றது. 1913-ம் ஆண்டில் நீதிஸ்தலம் கோவிற் சொத்துக்கள் என்றும், அவற்றில் எவரும் உரிமை பாராட்ட முடியாதென்றும் தீர்ப்பளித்ததுடன், ஐந்து புதிய தருமகர்த்தாக்கள் வசம் கோவிற் பரிபாலனத்தையும் ஒப்படைத்தது. நீதிஸ்தலத் தீர்ப்புப்படி காலத்திற்குக் காலம் தருமகர்த்தாக்கள் தெரிவுசெய்யப்பட்டுக் கோவில் நிருவாகம் செவ்வனே நடைபெற்று வந்தது. 1924-ம் ஆண்டில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஐந்து தர்மகர்த்தாக்களில் நால்வர் மறைந்து போக, எஞ்சி நின்ற ஒரே ஒரு தர்மகர்த்தாவான திரு. சி. விசுவலிங்கம் என்பவர் கோவிலைப் பராமரிக்கும் நிலையில் தான் இல்லாதிருப்பதாக 1936-ல் நீதிதலத்திற்குத் தெரிவித்து விட்டார். 1924—1929க்கு இடைப்பட்ட காலத்திலும் தர்மகர்த்தாக்கள் தமக்குள் சச்சரவிட்டுக் கோவிற் பரிபாலன விவகாரத்தில் நீதிஸ்தலம்வரை சென்றுள்ளனர்.

## நீதிமன்றத்தின் உத்தரவு

1926-ம் ஆண்டளவில் நித்திய மேளத்துடன் சிறப்பாக இயங்கி வந்த இக் கோவில் நிர்வாகம் 1933 — 1936-க்கு இடைப்பட்ட காலத்தில் பெரிதும் சீர் குலைந்தது. கோயிலும் பாழடைந்தது. கவனிப்பார் எவரும் இலர். கோவிற் காணிகளில் பலர் அத்துமீறிக் குடியேறினர். துஷ்டர்களும் திருடர்களும் கோவிற் காணிகளில் குடிபுகுந்திருந்ததுடன் தமது கோட்டையாகவும் இந்த இடத்தைப் பாவித்துக்கொண்டனர். இவர்கள் கடைசித் தர்மகர்த்தாவையும் பயமுறுத்தி விரட்டினர். இந்தக் காலத்தில் துஷ்டச் செயல்களுக்கும் கெட்ட நடத்தைகளுக்கும் இருப்பிடமாகக் கப்பித்தாவத்தை தோற்றமளித்தது. பலர் கோவிற் காணிகளிலும் வீடுகளிலும் சொந்தங்கூடப் பாராட்டினர். கோவில் வளவும், சாணமும் சகதியும், சேறும், ஈயும் நிறைந்த ஊத்தைக் காடாகக் காட்சியளித்தது. இந்த அவல நிலையைக் கண்ட கொழும்புவாழ் இந்துக்களிற் பலர் கண்ணீர் சிந்தினர்.

1936-ல் நீதிஸ்தல உத்தரவுப்படி வழிபடுவோர் கூட்டம் நடைபெற்றது. தருமஸ்தாபனங்களுக்கு வரையாது வழங்கிய வள்ளல் காலஞ்சென்ற திரு. கே. மதியாபரணம் ஐயா அவர்கள், திரு. எஸ்.ரி. கனகசபை, திரு. வி. ஏ. கந்தையா (முன்னுள் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர்) திரு. கே. இராசநாயகம், திரு. கே. தர்மலிங்கம் ஆகியோர் புதிய தர்மகர்த்தாக்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். திரு. ஆ. சின்னத்தம்பி அவர்கள் தர்மகர்த்தாக்கள் சபைக்காரியதரிசியாகத் தெரிவுசெய்யப்பட்டார். காலஞ்சென்ற திரு. கே. மதியாபரணம் ஐயா அவர்கள் இக்கோவிற் புனருத்தாரணத்திற்காகச்

செய்த உதவிகள் அளப்பரியவையாகும். அவரது உதவிகள் வாயாற் சொல்லி அடங்கா. பின்பு காலத்திற்குக் காலம் தெரிவுசெய்யப்பட்ட தர்மகர்த்தாக்கள் சபைகளில் திருவாளர்கள் க. ஞானசெல்வம் (மட்டக்களப்பு), ச. த. சின்னத்துரை, எஸ். பொன்னையாபிள்ளை, எஸ். ஆர். சங்கரப்பிள்ளை, வி. மயில்வாகனம், பொ. சிவானந்தம், கே. கனகசிங்கம்' எஸ். சரவணமுத்து, வி. நல்லசேகரம் (காரியதரிசியாக) ஆகியோர் அங்கம் வகித்தனர். ச. த. சின்னத்துரை அவர்களை தர்மகர்த்தாக்களில் ஒருவராக தெரிவுசெய்த பின் ஆ. சின்னத்தம்பி அவர்களின் பிரதான தர்மகர்த்தாவின் தலைமையின்கீழ் அவருடைய கடமைகளைச் செய்து உறுதிப்படுத்தும் சந்தர்ப்பங்களில் பல இன்னல்கள் ஏற்படினும் வழிபடுவோர் பிரதிநிதி என்ற முறையில் தனி ஒருவரினதும் விருப்பு வெறுப்புகளுக்கு தலை வணங்காது கடமையே கண்ணாக செயலாற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர்களது காலத்திலேயே அதாவது 1936-க்குப் பின்னர் தெரிவு செய்யப்பட்ட தர்மகர்த்தாக்களது காலத்திலே கோவில் இன்றுள்ள அதிஉன்னத நிலையை அடைந்தது எனலாம். இத்தர்மகர்த்தாக்களின் இடைவிடாத முயற்சியினால் *1933*ம் ஆண்டளவில் பாழடைந்த கோவில் *1948*ம் ஆண்டிலிருந்து மீண்டும் புதுப்பிக்கப்பட்டு *1950* ம் ஆண்டளவில் மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. 1933 - 36 க்கு இடைப்பட்ட காலத்தில் கோவில் வளவில் அத்துமீறிக் குடியேறிச் சொந்தம் பாராட்டிய காடையர்களும் துஷ்டர்களும் படிப்படியாக அகற்றப்பட்டனர். இத்துறையில் காலஞ்சென்ற பெரியார் திரு. கே. மதியாபரணம் ஐயா அவர்கள் அரும்பணியாற்றினர். 1951ல் இந்தச் சுத்திகரிப்பு வேலைகள் பூரணமடைந்தன. இதற்குப் பதினைந்து வருடகாலம் பிடித்தது. கோட்டில் பல வழக்குகளையும் தொடரவேண்டியிருந்தது.

## கோவிலைச் சீர் செய்த பெரியார்

1936-ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கோவிலின் மிகச் சிரேஷ்ட தர்மகர்த்தாவாக இருந்து வருபவரான திரு. ஆ. சின்னத்தம்பி ஐயா அவர்களுக்குச் சைவ உலகம் மிகக் கடமைப்பட்டுள்ளது. தமிழ் பல்கலைக் கழக இயக்கமென்றால் என்ன, திருக்கேதீச்சரத் திருப்பணி வேலைகள் என்றால் என்ன, இவரது சேவைகளை விவரிக்கத் தனிநூல் எழுதலாம். இவரது ஊக்கமும் விடாமுயற்சியுமே கப்பித்தாவத்தை சீரடைய காரணமாகும். இது மிகையான கூற்றல்ல அத்துமீறிக் குடியேறியவர்கள் விவகாரத்தில் இவரதுபணி எங்கும் பலனையே அளித்தது. கோவில் வளவில் மூன்று பெரிய கட்டங்கள் இவரது முயற்சியால் இவர் பிரதம தர்மகர்த்தாவாக இருக்கும் பொழுது ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றின் வரும்படியும் கொண்டு நித்திய மேளத்துடன் ஆறுகாலப் பூசையும் நடைபெறுகிறது. எவரது உதவியுமின்றியே கோவிற் கருமங்கள் சிறப்பாக எதிர்காலத்தில் நடைபெற திரு. சின்னத்தம்பி ஐயா அவர்கள் வழிவகைகளைத் தேடிவைத்துள்ளார் என்றே கூறவேண்டும். இப்பணியில் மற்றைய தர்மகர்த்தாக்களின் பணியும் எவரது சேவைக்கும் குறைந்ததல்ல. 1926-ம் ஆண்டிலிருந்து கப்பித்தாவத்தை விநாயகராலய வழிபடுவோர்களில் ஒருவராக இருக்கும் திரு. சின்னத்தம்பி ஐயா அவர்களுக்குக் மாநகரசபைப் பிரதம இலிகிதர் பதவியை விடுத்து மேலும் பதவியுயர்வுகளை வெளியூர்களில் அளிக்க மேலிடத்தார் விரும்பினர். பூக்கட்டிவைத்துப் பார்த்த பொழுது பிள்ளையார் சம்மதமளிக்க மறுக்கவே, இவரும் தனக்கு வந்த பதவி உயர்வுகளை ஏற்க மறுத்துக் கொழும்பிலேயே இருந்து வருகிறார். சுமார் முப்பத்தைந்து வருடகாலப் பொதுசன சேவையில் இதுவரை சுய விளம்பரத்தைத் தேடிக் கொள்ளாதவர் இவர். அடக்க ஒடுக்கமாக இருந்து பெரிய காரியங்களை எல்லாம் சாதிப்பதில் சமர்த்தர். நிறைகுடம் தழும்புமோ?



## 33 ஆண்டுகளாக பிரதம குரு

கப்பித்தாவத்தை விநாயகராலயத்தின் பிரதம குருவாக ஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா அவர்கள் 1939ம் ஆண்டு முதல் இருந்து வருகின்றார்கள். நல்லூர் தேவஸ்தானத்திலிருந்த ஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்களின் மகனான இவர் இக்கோவிலுக்கு வரும்பொழுது பிள்ளையாரைப் போலப் பிரமசாரியாகவே இருந்தார். நல்ல கைராசிக்காரர் இவர். 1939-ம் ஆண்டு ஆறு சதத்திற்கு அருச்சனை வரும்படியில்லாத நேரத்திலும், 1942-ல் ஜப்பான்காரர் கொழும்பில் இக்கோவிலுக்கு அருகாமையில் பேரையாற்றையடுத்துக் குண்டு வீசியபோதும் 1958-ம் ஆண்டின் போதும் இவர் பிள்ளையாரைவிட்டு [illegible]ல்லை. 1942ல் ஜப்பான்காரர் கொழும்பில் குண்டு வீசியபோது அநேகமாக நகர மக்கள் அனைவருமே இடம் பெயர, இவர் பிள்ளையாரைத் தனியே விட்டுவிட்டுப் போகாதது ஆச்சரியந்தான்! இக்காலத்தில் கொழும்பிலுள்ள இந்துக் கோவில்களில் பல பூட்டப்பட்டுக் கிடக்கையில் கப்பித்தாவத்தை விநாயகருக்கு விளக்கேரித்தலிலோ அல்லது பூசை முறைகளிலோ தடைகள் எதுவும் ஏற்படவில்லை. இதைச் சொல்லும்போது பிரதமகுரு ஸ்ரீ சண்முகரத்தின சர்மா அவர்கள் கண் கலங்கி அழுதுவிட்டார். சர்மா அவர்கள் கோவிலில் குடிபுகுந்த சமயத்தில் கோவில் வளவில் அத்துமீறிக் குடியேறி வசித்த குடும்பங்கள் கோவிற்பிரகாரம் பூராவையுமே அசிங்கப்படுத்திக் கொண்டிருந்தார்களாம். 1942ல் விவாகமான ஸ்ரீ சர்மா அவர்களுக்கு இன்று பதினொரு குழந்தைச் செல்வங்களைப் பிள்ளையார் அருளியிருக்கிறார். தான் தான் பிரமசாரியென்றாலும் மற்றவர்களாவது ஏராளமான குழந்தை குட்டிகளுடன் இருக்கட்டுமே என்பது எந்த விக்கினமும் தீர்ப்பவரின் எண்ணம் போலும். 'தினகரன்' தனது ஞாயிறு வெளியீட்டை முதன் முதலில் ஆரம்பித்த போது பூசை வழிபாடுகளை நடத்தியவரும் இவரே என்பதும் குறிப்பிடத் தக்கது.


## இன்று இயங்கும் மூன்று நிறுவனங்கள்

இன்று கப்பித்தாவத்தை இருக்கும் உன்னத நிலை அனைவரும் அறிந்த விஷயமே. மனோரம்மியமான சூழலில் புனிதமாகவும் கம்பீரமாகவும் கோவில் காட்சியளிக்கின்றது. தினமும் பல நூற்றுக்கணக்கில் வழிபடுவோர் வருகின்றனர். "கொழும்பு ஏழு" போன்ற அந்தஸ்துள்ள இடங்களில் உள்ளவர்களும் இன்று இக்கோவிலையே நாடுகின்றனர். கோவில் வாசல்வரை இன்று நல்ல சாலை அமைக்கப்பட்டிருக்கின்றது தமிழ்க் கல்விக் கூடமொன்றும் 1954ம் ஆண்டளவிலிருந்து இங்கு இயங்கி வருகின்றது. வருடந் தோறும் கடந்த முப்பத்தாறு வருடங்களாகப் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களைப் போஷிக்கும் கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையும் தற்பொழுது சில ஆண்டுகளாக அங்கேயே இயங்கி வருகின்றது. கோவில், பாடசாலை, கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை ஆகிய அந்த மூன்று நிறுவனங்களும் ஒன்றுடன் ஒன்று ஆத்மீகத்தொடர்புடன் இயங்கி வருகின்றன. அவையனைத்திலும் திரு. ஆ. சின்னத்தம்பி ஐயா அவர்கள் நடு நாயகமாக நின்று உழைக்கின்றார்கள். கோவிலுக்குத் தொலைபேசி வசதியும்

உண்டு. பல இன மத மக்களும் இக்கோவிற் தரிசனத்திற்காக இன்று வருகின்றனர். தினமும் வெளியூர் யாத்திரிகர்கள் வந்து தங்கிப் போவதற்கும் இங்கு குறைவில்லை. கொழும்பில் யாத்திரிகர்கள் பாதுகாப்பாகத் தங்கிப் போகக்கூடிய இடங்களில் இன்று கப்பித்தாவத்தை முதல் ஸ்தானம் வகிக்கின்றது.

கப்பித்தாவத்தை விநாயகப் பெருமான் கீர்த்திமிக்கவர் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகவும். இன்று இரண்டாவது முறையாகப் பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு கோவில் புதுப்பிக்கப்பட்டு, மகா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. எல்லாம் விக்கினம் தீர்க்கும் விநாயகன் அருளே! கப்பித்தாவத்தையின் எதிர்காலம் மேலும் பிரகாசமாக இருக்க எல்லாம் வல்ல திருவருள் அருள் பாலிப்பதாக.


சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் இக்கோவிலிலும் அதன் சுற்றுப் பிரகாரமும் வாவியாற் சூழப்பட்ட அழகிய தீவாகக் காட்சியளித்தது. இன்று அழகிய கோட்டை மதிலால் சூழப்பட்ட கவர்ச்சிமிக்க பெட்டகத் தீவாகக் கப்பித்தாவத்தை காட்சியளிக்கிறது.



ஸ்ரீ மகாலட்சுமி

## கொழும்பில்
## 1974ம் ௵ மகாலட்சுமி பிரதிஷ்டை

காஞ்சிபுரம் ஸ்ரீ காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் ஆக்ஞைக் கிணங்க பெரியவாளின் ஆசி பெற்று அவர்களின் மேற்பார்வையில் நிர்மாணிக்கசெய்து கப்பித்தாவத்தையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ மகாலட்சுமி விக்கிரகம்.



ஜெகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள்

# கதிர்காம முருகன்

"பன்மொழி ஆராய்ச்சிக் கலாநிதி"

தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை அவர்கள்

---

"அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்க ளாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய"

முருகன் தோன்றிவிட்டான்! "சோதிப் பிழம்பு" ஒரு மேனியாகத் தோன்றிவிட்டது. அந்தச் சோதிப் பிழம்பு, அருவமாயும், உருவமாயும், அநாதியாயும், ஒன்றாயும், பலவாயும், பிரமமாயும் நின்றது. "உண்மையறிவின்ப வடிவமாய் உலகம் முழுவதும் தோன்றி ஒடுங்குதற்கிடமாயுள்ள பொருளாகிய கடவுள்" – சிவன் - கருணை வெள்ளம் பொழிகின்ற ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு, உலகம் உய்யும்வண்ணம் முருகக் கடவுளாகத் தோன்றியருளியமையையே மேற்காட்டிய கந்தபுராணப் பாடல் எடுத்துக்கூறுகிறது.

## "முருகன்" எங்கே உதித்தான்?

'மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும்
நிமல மூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி
அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதில்
வீற்றிருந் தருளினானே."

வேதங்களின் முடிவினாலும், மனத்தினாலும், வாக்கினாலும் அறியவொண்ணாமல் எங்கும் நிறைந்து நின்ற சிவபெருமானே கருணையுடன் ஆறு திருமுகங்களை உடையவராய்த் தோன்றியருளி, சரவணப் பொய்கையிலே மணங் கமழுகின்ற செந்தாமரை மலரின்மீது வீற்றிருந்தருளினார். இப்படிக் கந்தபுராணம் கூறுகின்றது.

"நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை, ஐவரு ளொருவ னங்கையேற்ப, அறுவர் பயந்த ஆறமர் செல்வ." என, முருகனைப் போற்றுகிறார் நக்கீரர். "நிவந்தோங்கு இமயத்து நீலப் பைஞ்சுனைப் பயந்தோர் என்ப, பதுமத்துப் பாயல். பெரும் பெயர் முருக!" என எடுத்தோதிப் பரவுகின்றது பரிபாடல். 'சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர், திருமுலைப்பா லுண்டான்" எனச் சிலப்பதிகாரமும் முருகனைப் போற்றுகின்றது.

முருகனைப் போற்றுகின்ற நக்கீரர், "ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை, மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!" என விளித்துப் போற்றுகின்றார். சிலப்பதிகாரமும் "மலைமகள் மகனை" என அவனைக் குறிப்பிடுகின்றது.

முருகன் மலையிலே உதித்தான். மலையின்கண்ணதாகிய "சரவணப் பொய்கை" எனப்படும் "சுனை"யிலே தோன்றினான். "தாமரை" மலரிலே தோன்றி வீற்றிருந்தான். இந்தத் தோற்றந்தான் பற்பல உண்மைகளை விளக்குகின்றது. "ஆல்" கெழு கடவுளின் புதல்வனாய், "மலைமகள்" மகனாய், "மலை"யிலே - ஒரு "சுனை"யிலே "சோதிப் பிழம்பு" ஒரு மேனியாகத்

தோற்றியுள்ளமை உலக வரலாறு உண்மையான வகையில் உருவாவதற்கு வழி காட்டுகின்றது. முருகன், சோதிப் பிழம்பு. ஒளிச் சுடர். சோதி, ஒளி, சுடர் ஆகிய சொற்கள்மட்டுமன்றி இலக்கிய இலக்கண ஆசிரியர்களால் மிகுதியாக எடுத்தாளப் பட்டு வந்த இலக்கம், எல் ஆகிய சொற்களும் வரலாறு தெரிவிக்கும் வகையில் எமக்குப் பயன்படுகின்றன. "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி"யின் பெருஞ்சிறப்பினைக் காண்பதற்குத் திசை காட்டுகின்றன.

இயற்கையோடிணைந்த வாழ்வினை நடாத்திக்கொண்டிருந்த பழந் தமிழர் உள்ளத்திலே - குறிஞ்சி நில வாழ்க்கைக் காலத்திலே - ஊரும் பேரும் உருவுமற்றவன் எனப் போற்றப்படும் கடவுளே - "முருகன்" எனத் தோன்றினன். "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய" குடியினர் உள்ளத்திலே தோன்றினன்.

"ஒரு நாமம் ஓர் உருவம்" இல்லாத இறைவனைப் பேரும் உருவும் கொடுத்து வழிபடும் மக்கள் அவனைக் கண்கவர் வனப்புடையவனாகவும், செவிக்கினிய தேன்போன்ற இன்சொல்லினை உடையவனாகவும், மூக்கிற்கு இனிமை பயக்கும் நறுமணத்தினையுடையவனாகவும், மெய்ந்நயந் தெரிக்கும் இளமையுடையவனாகவும், உள்ளத்திற் பதித்து மதித்து வாயாரப் புகழ்வதற்குரிய கடவுட்டன்மையும் ஒருங்கே அமையப்பெற்றவனாகவும் காட்டுகின்ற பெற்றி வாய்ந்ததொரு தமிழ்ச் சொல்லினால் "முருகு" எனக் குறித்ததைப் போற்றாமலிருக்க முடியாது. அச் சொல்லினுக்கு அழகு, தேன், மணம், இளமை, கடவுட்டன்மை என்னும் பொருள்கள் உண்டு. திருமுருகாற்றுப்படை என்னும் நூலிலே கூட - அதன் பெயரில் - "முருகு" என்னும் சொல்லே முருகனைக் குறிப்பதாய் வந்துள்ளது. "வாழிய முருகே" என நற்றிணை கூறும். "முருகன்" என்னும் சொல்லினுக்கு "முருகை உடையவன்" என்பது பொருள். "முருகு" என்னும் சொல்லினைப் பல்பொருள் ஒரு சொல்லாகச் கொண்டு, முன்காட்டிய அனைத்தையும் உடையவன் எனக் கொள்வதே சிறப்பாகும். தெய்வம் இயற்கையான அழகுள்ளதென எல்லா மதத்தினரும் எடுத்துரைப்பர். இச் சிறப்புப் பண்பினைப் போற்றியே "சொக்கன்" எனச் சிவபெருமானுக்கும், "அழகன்" எனத் திருமாலுக்கும் பிற்காலத்திற் பெயர்கள் தோன்றின எனலாம்.

## முருகனே "எல்லப்பன்"

"ஓவற விமைக்கும் சேண் விளங்கவிர் ஒளி" எனத் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. "சோதிப் பிழம்பதோர் மேனியாகி" எனப் போற்றுகின்றது கந்த புராணம். "ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்துச்சியின் மேலளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேன்" எனக் கூறிப் பராவுகின்றது திருப்புகழ்.

இங்ஙனமாகப் போற்றப்படுகின்ற ஒளியுருவினனான முருகன் "எல்லப்பன்" (எல் - அப்பன்) எனப்பட்டான். "எல்லே இலக்கம்" என எடுத்து விளக்குகின்றது தொல்காப்பியம். எனவே, யாம் "எல் - இலக்கம் - ஒளி" என்பதை உணர்ந்து கொள்ளலாம். "எல் நாடு" (ஒளி நாடு) "எல்லம்" என வழங்கப்பெற்றது. ஒளி நாட்டினைப்பற்றியும், அந் நாட்டினராகிய "ஒளியர்"கள் பற்றியும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. எல் நாட்டிலே "முருகன்" அக் காலத்திலே "எல்லப்பன்" எனவே வழங்கப்பெற்றான். இந்த "எல்லப்பன்" என்னும் சொல்லே நாளடைவில் "செல்லப்பன்" எனத் திரிபுபெற்று வழங்குகின்றது. "செல்லன்", "செல்லையன்" என வரும் பெயர்களும் அத்தகையனவே.

"எல்லம்" என்னும் நாட்டில் இருந்த கதிர்காமத்தையே பண்டைக் காலத் தமிழர், தமது இனிக்கும் மொழியிலே "எல்

லக் கதிர்காமம்'' என வழங்கினர்கள். ''எல்லக் கதிர்காமம்'' என்ற பெயரே நாளடைவில் ''செல்லக் கதிர்காமம்'' என வழங்கப்பட்டதாகும். ''எட்டி'' என்னும் பழந்தமிழ்ச் சொல் ''செட்டி'' என இக் காலத்தே திரிபுபெற்று வழங்கிவருவது போல ''எல்லக் கதிர்காமம்'' என்னும் பெயரும் ''செல்லக் கதிர்காமம்'' எனத் திரிபுபெற்று வழங்கி வருகிறது. இப்படி ஒரு சொல் திரிபு பெற்று வருவதற்கு எத்தனை நூற்றாண்டுகள் செல்லும் என்பதை யாம் சிறிது கருதிப் பார்ப்போமானல், இப் பழம்பெரும் திருக்கோயிலின் தொன்மை தெளிவாகும்.

இந்த உண்மையினை அறிந்துகொள்ளாமல், புகழ் வாய்ந்த பேராசிரியர்கள் கூட, பொருத்தமற்ற விளக்கங்கள் அளிக்கின்றார்கள். பேரறிஞர் வரிசையிலே வைத்தெண்ணப்படும் ''கலைமகள்'' ஆசிரியரான திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், ''முருகவேளும் வள்ளியெம்பெருமாட்டியும் ஏகாந்தத்திலிருந்து இன்புற்ற இடம் இத் திருத்தலம் என்று சிலர் சொல்கிறார்கள். செல்லக் கதிர்காமம் என்ற திருநாமம் இந்த அருமைப்பாட்டை நினைந்து வந்தது போலும்''. என (கதிர்காம யாத்திரை - பக்கம் 46, 47) ஐயுறவானதோர் இடப் பெயராராய்ச்சி செய்கிறார்கள். பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களோ ''மலையினின்றும் மாணிக்க கங்கை அருவியாக இழிந்து பரந்து பாயும் இடம் இப்போது செல்லக் (செல்வக்) கதிர்காமம் என்று வழங்கப்பெறுகின்றது. பழைய கதிர்காமம் என்றும் சுவாமி மலை என்றும் அதனைச் சொல்வதுண்டு.'' என, (ஆற்றங் கரையினிலே - பக். 282.) ''செல்வம்'' எனும் சொல் ''செல்லம்'' எனத் திரிந்தது போற் காட்டுகின்றார்கள்.

## உலகின் முதல் நிலம்

உலகம், ஞாயிற்றிலிருந்து தெறித்து விழுந்த ஒரு பெரும் பொறித் திவலையே யாகும் என மேலைநாட்டு ஆராய்ச்சியாளர்களும் உறுதிப்பாட்டுடன் கூறுகிறார்கள். அவ்வாறு வீழ்ந்த வெங்கதிர் ஒளிப்பிழம்பு சுழன்றுகொண்டிருக்கிறது. கோளம் ஆகிவிட்டது. குளிர்ச்சி பெற்றுவிட்டது. அப்படி அது குளிர்ச்சி பெறும் போது, அக் கோளத்தின் நடுக்கோட்டினுக்கு இருமருங்கிலுமுள்ள இடப்பகுதியே மற்றைய பகுதிகளைவிட மிக்க விரைவுடன் சுழல்கின்றது. எனவே, அப் பகுதியே முதலிலே குளிர்ச்சியடைந்திருக்கும். அப் பகுதியிலே தான் உயிரினம் தோன்றுவதற்கேற்ற வாய்ப்புகள் முதலில் ஏற்பட்டிருக்கும் என்பதில் எவர்க்கும் ஐயம் தோன்ற இடமில்லை. அங்கேதான் தமிழகம் அமைந்திருந்தது. அதுதான், தமிழினத்தின் தாயகம். மக்களினத்தின் தொட்டில். கடவுட் கொள்கையின் பிறப்பிடம். தமிழினத்தின் தாயகத்திலே முதலிலே மக்கள் பேசத் தொடங்கிய மொழி தமிழ் மொழியே யாகும். அந்தப் பழைய நாட்டிலேதான் முருகன் தோன்றினன். உலகம் உய்யத் தோற்றினன். அக் காரணங்கொண்டுதான் அவன் தமிழ்க் கடவுளாகவும், தலைமைப் புலவனாகவும் போற்றப்படுகிறான்.

## கல் தோன்றி மண் தோன்றாக் காலம்

''உலகம்'' என்னும் சொல் இன்று நாம் வாழும் நிலவுலகம் முழுவதையும் அடக்குவதாக வழங்கப்பெற்று வருகிறது. அச் சொல்லினைப்போல, நிலவுலகம் முழுவதையும் அடக்குவதாக வழங்கப்பெற்று வந்த இன்னொரு சொல் ''பார்'' ஆகும். ''பார் முதிர் பனிக்கடல்'' (திருமு. 45.), ''பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப் புக்கு'' (பரி. 5. 1.), ''பாருடைப் பனிக் கடல்'' (சீவக. 274.) என வருவன அவ் வழக்கினைக் காட்டுவனவாகும். அந்தப் பாரினைச் சூழ்ந்து கிடந்த கடல் - ''பார்க் கடல்'' - பொருளுணர்ந்துக்கொள்ள முடியாத வட மொழியாளருக்குப் ''பாற் கடல்'' ஆகிவிட்டது!

தமிழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருந்த ''உலகம்'' உண்மையாகவே தொடர்ந்து

பாறையாகவோ பாராகவோதான் இருந்திருக்கிறது. மலைகளும், குன்றுகளும், குன்றங்களும், கோடுகளும், பாறைகளும் நாடெங்கும் பரந்து கிடந்து பழமை காட்டுகின்றன. அவையே பிற்றைக் காலங்களில் அசலங்களாகவும் சைலங்களாகவும் பெயர்த்தமைக்கப்பட்டன. அப்படியாக உலகம் அமைந்திருந்த காலத்திலே - அந்தப் பழைய - பெருநாட்டிலே, ஒரு குடி தோன்றியது. அந்தக் குடிதான் ‘முன் தோன்றி மூத்த குடி’’.

‘‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே’’ தான் முருகன் தோன்றினான். பாராகவே இந்த உலகம் கிடந்த காலத்திலே தோன்றினான். மலையிடத்ததான ஒரு சுனையிலே தாமரை மலரிலே வீற்றிருந்தான். அவனுடைய தாயார் பெயர் ‘‘மலைமகள்’’. ‘‘பார்வதி’’ என்னும் பெயரிலேகூட அந்தப் ‘‘பார்’’ வருகிறது.

கல் தோன்றி மண் தோன்றாமலிருக்கும் காலம் ஒன்று இருந்தது என்பதை இக் காலத்தே அமெரிக்க நாட்டினரும் இரசிய நாட்டினரும் நடாத்திவரும் ‘‘திங்கள் உலக ஆராய்ச்சிகள்’’ தெள்ளத் தெளியக் காட்டுகின்றன. அத, அத்தி, அரசு, ஆல் என வருகின்ற மரப்பெயர்கள், சிந்துவெளி நாகரிக காலத்தில் மட்டுமன்றி அதற்கு முந்திய காலத்திலும் தமிழகத்தைச் சார்ந்தெழுந்த புராணக் கதைகளிலே இடம்பெற்றுள்ளன. அம் மரவகைகள் மண் தோன்றாத காலத்திலும் தோன்றி வளர்ந்திருக்கக் கூடியவை என்பதை யாம் அறிவோம். கல்லினைப் பற்றிப் படர்ந்து வளரும் தம்மை வாய்ந்தவை அவை. சிந்துவெளி நாகரிகம்பற்றிப் பின்னிலாந்திலும் இரசியாவிலும் இப்போது நிகழ்த்தப்பட்டு வரும் ஆராய்ச்சிகள் இவற்றைப்பற்றிய உண்மைகள் பலவற்றைத் தெளிவுபடுத்துகின்றன.

## குறிஞ்சி முருகன்

மக்கள் தோற்றம் முதற்கண் குறிஞ்சி நிலத்திலேதான் தோன்றிய தென்பதைத் தமிழ் இலக்கியங்கள் மட்டுமன்றி, மேலைநாட்டு ஆராய்ச்சியாளரும் ஏற்றுப் போற்றுகின்றனர். முதலிலே தோன்றிய மலையினையும் அதனைச் சார்ந்த நிலப்பகுதியினையும் குறிஞ்சி நிலம் எனப் பகுத்து வகுத்து, அந் நிலத்துக்குத் தெய்வமாக முருகனைக் கொண்டமை தமிழ் மக்களின் அறிவியல் நோக்கினையும் வரலாற்றுணர்ச்சியினையும் காட்டுவதாகும். ‘‘சேயோன் மேய மைவரை உலகம்’’ எனக் கூறுகின்றது தொல்காப்பியம்.

முருகனுக்குரிய வாகனங்களாகத் தமிழ் மக்கள் கொண்டவை ஆட்டுக் கடாவும் மயிலும் ஆகும். ஆட்டுக் கடாவுக்கு ‘‘ஏழகம்’’ என்று ஒரு பெயரும் உண்டு. ‘‘ஏழகம்’’ என்னும் சொல் திரியப்பெற்று, மேஷம், மேஷகம் என வடமொழியில் வழங்கும். ஏழ் நாட்டதான ஆட்டுக்கடாவினை ‘‘ஏழகம்’’ எனக் குறித்திருந்தனர் போலும்! ‘‘ஏழகத் தகர்’’ என்னும் இலக்கிய வழக்கு இதனை வலியுறுத்துவதாகும். சுமேரியாவிற் கண்டெடுக்கப்பட்ட ஆப்புவடிவச் சாசனங்கள் எமது நாட்டினை (‘ஏழகம்’’ என ஒரு காலத்திற் பெயர் கொண்டிருந்த இந் நாட்டினை) ‘‘மேழகம்’’ எனக் குறிப்பிடுகின்றன. ‘‘ஏழகம்’’ என்னும் எமது நாட்டின் பெயர் ‘‘மேழகம்’’ என்பதை நுனித்தறிய முடியாத பின்னிலாந்துப் பேரறிஞர்கள், அச் சொல்லினை ‘‘மிலேச்ச’’ (வடமொழி)–‘‘மிலக்க’’(பாளிமொழி) ஆகிய சொற்களுடன் தொடர்புபடுத்திப் பிழைத்தனர்.

## ‘‘எல்லம் திரிந்தது’’

எமது நாட்டின் பெயராகிய ‘‘எல்லம்’’ நாளடைவிலே, எலு, எழு, ஏழ், ஏழம், ஏழகம், ஈழம் எனவெல்லாம் திரிபுபட்டுவிட்டது. ‘‘எல்லே இலக்கம்’’ (தொல். சொல். 7. 21) எனக் கூறுகின்றது தொல்காப்பியம். எல் - இலக்கம் – ஒளி. ‘‘ஒளி நாடென்பது செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தில் ஒன்று’’ (தொல். எச்ச. சூ. 6-உரை) என்பது யாம் அறிந்தது. ‘‘ஒளிய

ராவார் பிற மண்டலங்களை அரசாளுதற்கு உரிய வேளாளர்'' எனக் கலித்தொகையில் உரை கூறுகிறார் நச்சினார்க்கினியர். ''பல் ஒளியர் பணிபு ஒடுங்க'' (பட்டினப் பாலை. 274) என்ற இடத்திலும் ஒளி நாட்டவரான ''ஒளியர்'' குறிப்பிடப்பட்டுள்ளனர். ''செங்கோவே ஒளிச் செம்மல்'' எனச் செங்கோன் தரைச்செலவு என்னும் பழந்தமிழ் நூல், அந் நாட்டு மன்னனை ''ஒளிச் செம்மல்'' எனக் குறிப்பிடுவதும் காணலாம். ''இலக்கம்'' என்னும் சொல்' ''லக்'' ''லக் திவ'' என நின்று சிங்கள மொழியில் எங்கள் இலங்கையைக் குறிக்கின்றது. இலங்கை என்னும் எமது நாட்டின் பெயர் சிங்களத்தில் ''லங்கா'' என வழங்குகின்றது. இலங்கையின் பழைய பெயர் ''எலு'' (எழு) என்றும், அங்கு வழங்கிய மொழியின் பெயர் ''எலு பாஷை'' (எழு மொழி) என்றும் சிங்கள நூல்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன.

> ''பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
> ஒருபகல் எழுவர் எய்தியற்றே''

(புறநா. 358.) என வரும் புறநானூற்றுப் பகுதியில் வரும் ''எழுவர்'' எழு நாட்டவர் ஆவர். கடல்கொண்ட நாடுகளின் பெயர்களில் வரும்''ஏழ்''எனும் சொல்லும் எழு நாட்டினையே குறிப்பதாகும். தென்னிந்திய சாசனத் தொகுதியில் ''மணிமங்கலம் சபையோர் சாசனம்'' முதலாகப் பல சாசனங்களிலே வரும் ''எழு கடல் ஈழம்'' ''எழு கடலின் நடுவிலமைந்த ஈழ நாடு'' எனவே பொருள் தருவதாகும். ''எழு களிறு புரக்கும் நாடு கிழவோயே'' (புறநா. 40) என வரும் பகுதியிலே குறிப்பிடப்படுவது எமது நாட்டுக் களிற்றியானையே ஆகும்.

கடல்கோளின்பின், பழந்தமிழ் நாட்டின் வரலாற்றையும், எழு (ஏழ்) நாட்டினையும், எழு நாட்டவராகிய எழுவரையும் தெரிந்துகொள்ளமுடியாதவராய்ப் பின் வந்த புலவர்களும் உரையாசிரியர்களும் இடர்ப்பட்டனர். கடல்கோளுக்கு முன்னும் பின்னும் எழு நாடு பற்றித் தாம் கேட்டவற்றையெல்லாம் வைத்து, தமது ''நிறை வெய்தாத'' புவியியல் அறிவினையே ஆதாரமாகக்கொண்டு,''எழு''(ஏழ்)என்பதனை எழு என்னும் எண்ணுகக் கருதி) ''சப்த'' என மொழிபெயர்த்து அடியத்திவாரமேயற்ற பல கதைகளை வடமொழியாளர் புனைந்துரைத்தார்கள். உண்மை மறைந்துவிட்டது.

## ஏழு மலையான்

''எல் மலை''யே ''கதிரமலை என வழங்கப்பெற்றது. ''கதிர்மலை''யாகவும் வழங்கப்பெற்றிருக்கலாம்.''கதிரமலை''யே''கதிரை'' எனவும் வழங்கிற்று. எல்மலையில் எழுந்தருளியிருந்த முருகக் கடவுளை ''எல்மலையான்'' என வழங்கினர் எமது முன்னோர். ''எல் மலை''யானது ''ஏழு மலை''யாக வழங்கப்பெற்றுவந்த காலத்திலே முருகன் ''ஏழு மலையான்'' எனப்பட்டான். எனவே, முருகனை ''ஏழு மலையான்'' எனக் குறிக்கும் வழக்கு எமது நாட்டிலிருந்து எழுந்து பரந்ததேயாகும் என்பதனை எவரேனும் மறுக்க முடியாது.

''ஏழ் நாடு,'' ''ஏழிசைச் சூழல்,'' ''ஏழியன் முறையது,'' ''ஏழகத் தகர்,'' ''ஏழகப் படை'' முதலாக இயலுகின்ற வழக்குகள் இதனை வலியுறுத்துவனவாகும்.''எல்லாளன்''என வரும் பெயர்''ஏழாளன்'' ஆகி, சிங்களத்தில் ''ஏளாரா'' ஆகியமையும் யாம் அறிவோம்.

## கதிர்காமம்

''கதிர்காமம்'' என்னும் சொல், சில பாடல்களில் ''கதிரகாமம்'', ''கதிகராமக் கிரி'', ''கதிர்காம வெற்பு'', ''கதிர்காம மாநகர்,'' ''கதிரை'' ''கதிர்காம மலை,'' ''கதிர்'' எனவும் வழங்கப்பெற்றிருக்கிறது. இவ்வழக்குகளை அருணகிரிநாதர் இயற்றிய ''திருப்புகழ்'' காட்டுகின்றது.

திரு குல. சபாநாதன் அவர்கள் தாம் எழுதி வெளியிட்ட ''கதிர்காமம்'' நூலில்

"கதிரகாமம்" எனத் தலையங்கம் இட்டுக் கொண்டு, "கதிரகாமம் என்பது சிங்கள மொழிச் சொல்லின் மரூஉவாய்த் தமிழ் மொழியின்கண் திசைச் சொல்லாய்ப் பிற் காலத்து வழக்கில் வந்ததென்பதே எமது கொள்கை. அக்கொள்கைக்கேற்பக் கதிரு மரங்களையுடைய ஊர் எனப் பெயர்க் காரணம் கூறுதலே பொருத்தமாகத் தோன்று கின்றது" என எடுத்தோதுகிறார்கள்.

சிங்கள வமிசத்தின் தாதை எனப் படும் விசயன் இலங்கையிலே கி.மு. 543ம் ஆண்டளவில் அடியெடுத்துவைத்து இறங்கு கின்றான். அம் மன்னனே "கி. மு. 500ம் ஆண்டளவில் கதிரையாண்டவருக்கு ஒரு கோயில் அமைத்தான்" என யாழ்ப்பாண வைபவ மாலை எடுத்தோதுகின்றது. அக் காலத்திலே சிங்கள மொழி உருவாக வில்லை. திரு. சபாநாதன் அவர்கள் கூறும் "கதிரு" மரமும் முளைக்கவில்லை. விசய மன்னன் வந்து சிங்கள மொழி பிறக்குமட் டும் "இலங்கையின் பழைய முருகன் கோயில் (உலகின் முதலாவது கோயில் என்றே கூறிவிடலாம்) "நாமகரணம்" நோக்கிக் காத்துக்கிடந்தது எனத் தொனி க்கவைப்பது தருமமாகாது. அல்லாமலும், "கதிரு"மரத்தினாலேயே இப் பழம்பெரும் கோயிலின் பெயர் அமைந்ததென்றும் கூறி விடமுடியாது. இன்னும் சிலர், "கதிரங் கருங்காலி" என வருகின்ற பிங்கல நிகண் டுச் சூத்திரத்தினை எடுத்துக்காட்டிக் கதிர மரம் (கருங்காலி மரம்) நிறைந்த கிராம மாதலால், இப்பெயர் ஏற்பட்டதெனபர்" எனக் காட்டும் திரு. சபாநாதன் அவர்கள் அது தமிழ்மொழிச் சொல் எனவே கொள்ளாமைக்குக் காரணம் யாதென அறிய முடியவில்லை. எப்படிப் பார்ப்பினும் இக் கொள்கை பொருந்தாததே ஆகும்.

"கதிரகாமம் என்னுஞ் சொல் "கார்த்திகேய கிராம" என்பதன் மருஉ வெனவும், யானை வாழ் கிராமமெனப் பொருள்படும் "கஜரகம" என்பதன் சிதை வெனவும், கதிரு (நச்சு) மரம் நிறைந்த கிராமம் (கதிருகொட என்பதுபோல) எனப் பொருள்படும் "கதிருகாம" என்ப தன் சிதைவெனவும் கொள்வர் சிலர். எனக் காட்டுவர் திரு. சபாநாதன் அவர் கள். இவை யாவும், புதுவதாக ஏதாவது காட்டிவிட வேண்டும். என்ற ஆசையினால், ஆய்ந்து பாராது புனைந்துகொள்ளப்பட்ட "நாடோடிச் சப்தோற்பத்தி"கள் எனவே கொள்ளுதல் வேண்டும்.

முருகன் பெருமையையும் திருக்கோயில் வரலாற்றையும் அறிந்துகொள்ளாமல் - மாமரத்தை "மாங்காய் மரம்" என்று கூறுவது போல - "கதிரகமத் தெய்யோ" எனவே வழங்கும் ஒரு மொழியில் கோயிற் பெயர்க்காரணம் காண விழைவது அழகாக இருக்கிறது.

## உண்மை யாது ?

தொல்லிப்பழை வழக்கறிஞர் திரு. வு. குமாரசுவாமி அவர்கள் "கதிரைமலைப் பள்ளு" என்னும் நூலின் முகவுரையில் "கதிர் என்னும் பதம் ஒளி என்னும் பொருள் கொண்டு, "கதிர்காமம்" 'கதிரை மலை" என்பன முருகவேள் ஒளி யாய் விளங்கி வீற்றிருக்கும் கிராமம், கிரியெனப் பொருள்படும். "ஓவற இமைக் கும் சேண் விளங்கவிர் ஒளி" என நக்கீர ரும், "சோதிப் பிழம்பதோர் மேனியாகி" எனக் கச்சியப்ப சிவாசாரியாரும், "ஒளி யில் விளைந்த உயர்ஞான பூதரத் துச்சி யின் மேலளியில் விளைந்ததோ ரானந்தத் தேன்" என அருணகிரியாரும் இன்னும் இவர்களைப் போலக் காட்சியனுபவமுள்ள வேறு மகான்களும் முருகவேள் ஒளியாய் விளங்குவதைக் கூறியுள்ளார்கள். இனி,

''கொடிநிலை கந்தழி வள்ளியென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே''

என்னும் தொல்காப்பியப் புறத்திணையியற் சூத்திரத்து உரையில், நச்சினார்க்கினியர் கொடிநிலை வெங்கதிர் (சூரியன்) எனவும், வள்ளி தண்கதிர் (சந்திரன்) எனவும், இடைநின்ற கந்தழி, ''ஒரு பற்றுக்கோடு மின்றி அருவாகித் தானே நிற்குந் தத்து வங் கடந்த பொருள்'' என விளக்கி உரை கூறியுள்ளார்''. (பக்கம் 6, 7.) எனக் காட்டுகின்றார்கள்.

''இவ்வாறாக அருவ நிலை கொண்டு கதிரைமலையில் எழுந்தருளிய முருகக் கடவுளை இந்துக்களும், புத்தரும், ஜாதி ஹிந்துக்கள் - ஹரிஜனர், சைவ - வைஷ்ண வர், வடநாட்டு தென்னாட்டு இந்தியர் - இலங்கைவாசிகள், தனவந்தர் - வறியர் என்ற சாதி, சமயம், பாஷை, அந்தஸ்து வகுப்புப் பேதங்கள் ஒன்றையும் பாராட் டாது, மந்திர தந்திர வைதிக ஆகமக் கிரியைகள் ஒன்றுமின்றி, தம்முள் அன்பிற் கலந்து பத்திவழிபாடாற்றுதற்கு இடனு யிருப்பதற்குக் காரணம் கதிர்காம க்ஷேத்திரம் கந்தழி முறையில் அமைக்கப் பட்டிருப்பதே. பண்டைக் காலத்துத் தமிழர் முருகனுக்கு அருவ வழிபாடாற்றும் முறைக்கு ஞாபகச் சின்னமாக இக் காலத்து விளங்குவது வட இமயக் கோடு முதல் தென் இலங்கைத் தேவிநுவரை பரியந்தமான பெரும் பரப்பிலுள்ள தேவாலயங்களுள் இக் கதிர்காமம் ஒன்றே'' என (பக்கம் 7, 8.) அவர்கள் காட்டுவது உண்மை தெரிந்துகொள்வதற்கு உதவுவதாகும்.

திரு. குமாரசுவாமி அவர்கள் காட்டு கின்ற வழிபாட்டு முறையினை யாம் இன் றும் யாழ்ப்பாணத்திலே தொண்டைமா னாற்றிலே அமைந்துள்ள ''செல்வச் சந்நிதி'' யிலும் காண்கின்றோம். ''உபய கதிர் காமம்'', ''சின்னக் கதிர்காமம்'', ''புதுக் திர்காமம்'' எனப் பெயர்கொண்ட திருக்கோயில்கள் பல எமது நாட்டிலே இருப்பதையும் யாம் அறிவோம்.

## முருகனே காட்டுகிறான்

கதிர்காம முருகனே, தமிழகத்தின் தொன்மையையும், பண்பாட்டு நெறி வளர்ச்சியையும், உலக நாகரிகத்தின் உண்மை வரலாற்றினையும் காட்டுகின் றான். கடவுட் கொள்கை உருவாகிய வரலாற்றினையே காட்டி விளங்குகின்றான்!

வான வெளியில் ஒளிப்பிழம்பாக விளங்கிக்கொண்டிருக்கும் கதிரவனைத் தமிழ் மக்கள், ''எல்'' எனக் குறித்தார் கள்; வழிபட்டு வந்தார்கள். தமது நாட் டினை 'எல் நாடு'' என்று வழங்கினர் கள். எல் நாட்டினையே ''ஒளி நாடு'' என வழங்கி வந்த மக்கள் அதனை ''எல்லாம்'' எனவும் வழங்கியதுண்டு.

''எல்'' லினை (ஒளியினைக்) கடவுளா கத் தமிழ் மக்கள் வழங்கத் தொடங்கிய காலத்திலே, ஆண் பெண் எனப் பாற் பாகுபாடு கொள்ளும் வழக்கம் ஏற்படவே யில்லை. பால் பகாமலே ''எல்'' எனப் பட்ட முருகன் பெயர், பிற்றைக் காலத் திலே ''எல்லப்பன்'' ''எல்லம்மன்'' என் னும் பெயர்களை ஆக்கிவிட்டது.


சிந்துவெளி நாகரிகக் காலத்திலே கூட ''மாரி'' எழுதப்பட்டு வந்த ''மாமழைப்'' பெயர் பிற்றைக் காலத்திலே ''மாரியப் பன்'' ''மாரியம்மன்'' என வழங்கிவந்த வரலாறும் யாம் அறிந்தது.

வேறு எத்தனையோ மலர்கள் இருப்ப வும், முருகன் ''தாமரை'' மலரிலே தோன்றி வீற்றிருந்தமையும் முதல் முத லாகத் தோன்றியமைக்கே சான்றாக விளங்குகின்றது. உலகத்தில் மலையிலே—சுனையிலே — முதன் முதலாகத் தோன் றிய மொழி தமிழே என்பதையும், முதன் முதலாகத் தோன்றிய கடவுள் தானே என்பதையும் முருகனே காட்டுகின்றான்! முருகன், ''கதிர்காம முருகன்''!

முற்றும்.

## உப தலைவர்கள்

| | |
|---|---|
| திரு. ச. வேலுப்பிள்ளை | 1926—1929 |
| திரு. க. சி. சந்திரசேகரம்பிள்ளை | 1926—1929 |
| பிரம்மஸ்ரீ சி செல்லையாக்குருக்கள் | 1929 |
| திரு. க. இராசநாயகம் | 1930—1944 |
| திரு கா. நாகலிங்கம் | 1930—1957 |
| திரு. வ. விசுவலிங்கம் | 1930 |
| திரு. க. ஞானச்செல்வம் | 1933 |
| திரு. க மதியாபரணம் | 1934—1952 |
| திரு. வி. ஏ. கந்தையா | 1935, 1943—1956 |
| திரு. வே. தா. சி. சிவகுருநாதன் | 1939—1941 |
| திரு. எஸ். சோமசுந்தரம் | 1939 |
| டாக்டர் மூ. சு. திருவிளங்கம் | 1940, 1951—1959<br>1962—1969 |
| திரு. வே. தி. சுப்பையாபிள்ளை | 1942— |
| டாக்டர் சி. சரவணமுத்து | 1945— |
| திரு. கே. ரி. சிற்றம்பலம் | 1952, 1953 |
| திரு. க. கனகரத்தினம் | 1953, 1954 |
| திரு. இரா. சபாநாயகம் | 1954, 1956—1975 |
| திரு. சு. சரவணமுத்து | 1955, 1958 |
| திரு. த. சுப்பையா | 1956—1958 |
| திரு. பொ. தம்பிமுத்து | 1957—1963 |
| திரு. ஆ. சின்னத்தம்பி | 1958—1974 |
| திரு. கே. குமாரவேலு | 1958 |
| பேராசிரியர் ஆ. சின்னத்தம்பி | 1959 |
| திரு. வி. சிவசுப்பிரமணியம் | 1959 |
| திரு. வெ. சங்கரலிங்கம் | 1960—1967 |
| திரு. ச. த, சின்னத்துரை | 1960 |
| திரு ஐ. இராமநாதன் | 1960—1962 |
| திரு. வ. இராசரத்தினம் | 1960—1968 |
| திரு. மு. ஸ்ரீகாந்தா | 1964 |
| திரு. என். கிருஷ்ணதாசன் | 1969 |
| திரு. க. நாகேந்திரா | 1969 |
| திரு. க. கனகசிங்கம் | 1970— |
| திரு. வை. பொன்னுச்சாமி | 1973 — |



உ
முருகன் துணை

கலைமகள் ஆசிரியர்
வித்துவான் உயர்திரு. கி. வா. ஜகந்நாதன் எம்.ஏ.
அவர்கள்

# வாழ்த்து

மரகதத் தீவாம் இலங்கையில் முருகன்
மறைபொரு ளாயருள் சுரக்கும்
திருவுடைத் தலமாய் நிலவுறும் கதிர்கா
மத்தினைச் சேவிக்கச் செல்வார்க்
கருமையாய் உண்டி யாதிய நல்கி
அவர்க்குத வியினைச் செய்யும்
பெருமைசால் தொண்டர் கூட்டத்தின் சிறப்பைப்
பேணியே போற்றுவார் பல்லோர்.

கொழும்பினில் கதிர்கா மத்துக்குச் செல்லும்
கூட்டத்துக் காந்தொண்டு புரிந்து
விழுமிய சீலம் உடையஇச் சபையோர்
மேவிய ஐம்பதாம் ஆண்டு
தொழுதகு சேவை செய்தனர்; இந்நாள்
துங்கமார் பொன்விழாக் கண்டார்;
ஒழுங்கினில் சிறந்த இன்னவர் நலங்கள்
ஓங்குக ஓங்குக பெரிதே.

வள்ளிநா யகியை மணந்தவன் இங்கே
வனமுறை வேடர்தம் பூசை
உள்ளமே உவந்து கதிரகா மத்தில்
உற்றதை ஏற்றனன்; அருளால்
தென்னிய அன்பில் யாத்திரை செய்வார்
சீருறு நலம்பல பெறவே
நல்குறு தொண்டு புரிந்திடும் சபைதான்
நாளுமேல் ஓங்கி வாளியவே

கதிர்காம நாதன் கழலடி வாழ்க
அதிராமல் அன்னோன் அடியை - மதிவைத்துப்
போற்றுவோர் வாழ்க புகுந்தொண்டர்க் கெந்நலமும்
ஆற்றுவோர் வாழ்க நன்மை யார்ந்து.

கி. வா. ஜகந்நாதன்,
5.2.1976

## கதிர்காம யாத்திரீகர் தொண்ட சபை

# பொன்விழா ஆசிச்செய்தி




பண்டிதர், சைவப்புலவர்,
செஞ்சொற் செம்மணி (மதுரை ஆதீனம்)
சிவத்தமிழ்ச் செல்வி,
சித்தாந்த ஞானசரம்,
( காஞ்சி ஸ்ரீ மெய்கண்டார் ஆதீனம் )

**செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**

தொண்டல்லால் துணையில்லை யென்று வாழ்ந்தவர்கள் சிவனடியார்கள். இவர்கள் தொண்டினை விரும்பியேற்று அருள் புரிந்தவன் எம்பெருமான். அத்தகைய திருத்தொண்டர்களின் திருவழியைப் பின்பற்றி வாழும் நெறி படைத்தவர்கள் கதிர்காம யாத்திரீகர் தொண்டர் சபையினர். கடந்த ஐம்பது ஆண்டுகளாக இயங்கிவரும் இச்சபை இந்நாட்டில் நற்பணியாற்றி வந்துள்ளது. கதிர்காம உற்சவ காலங்களில் ஆற்றிவந்த சேவை மிக மிகப் போற்றுதற்குரியதாகும். உண்டியும் உறையுளும் கொடுத்து யாத்திரீகர்களை ஆதரித்த பெருமை இவர்களுக்கு உண்டு. அதுவுமன்றி கப்பித்தாவத்தையில் நடைபெறும் தொண்டர் வித்தியாலயம் இவர்கள் தொண்டின் சின்னமாகும். ஆலயக் கருமங்கள், அடியார் பூசைகள், வித்தியாதானம், சைவசமயப் பிரசாரம் என்பவற்றில் அயராது உழைத்துவரும் இச்சபையினரை ஈழத்துச் சைவ மக்கள் மறுக்கமாட்டார்கள் இந்தப் பொன்விழாவிலே இச்சபையினரை போற்றி நிற்க வேண்டிய கடமை சைவ உலகுக்குண்டு. அந்த வழியிலே நாமும் போற்றி மேன்மேலும் நற்பணியாற்ற வேண்டும் என்று திருவருளைப் போற்றி அமைகின்றேன்.

**செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**

## என்றும் மறவோம்!



# திருக்கேதீசுவர ஆலயக் கும்பாபிஷேகம்

**ஈழ நாட்டின் பழம்பெரும் சைவத் திருக் கோயில்களுள் ஒன்ருன திருக்கேதீசுவர**

## ஆலயக் கும்பாபிஷேகம்

**நிகழும் இராட்சத ஆண்டு**

ஆனித் திங்கள் உக-ம் நாள்

## 4.7.1976

சிறப்புற நிகழவிருக்கின்றது.

## மதித்துப் போற்றுவோம்!

ஐம்பது ஆண்டுகளாகத் தெய்வப் பணி ஆற்றிவந்த எமது சபை, இக் காலம் வரை, உறுப்பினராகவிருந்து உள்ளன்புடன் பொருளுதவியும் தொண்டும் செய்து சபையின் ஆக்கத்துக்காக அல்லும் பகலும் உழைத்த அன்பர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்தும் உதவியளித்து வருதல் வேண்டும் எனவும் வேண்டுதல் செய்கின்றது.

ஐம்பது ஆண்டுகள் நிறைவுபெறுவதனை உயரி முறையிலே கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் இல்லாத நிலையில், பொன் விழா மலர் ஒன்றினை வெளியிடுதல் வேண்டும் என எமது சபை கருதியது. அக் கருத்தினை நடைமுறைப் படுத்தும் வகையிலே சபையின் துணைத்தலைவர்களுள் ஒருவராகவும், லீலா அச்சக உரிமையாளராகவும் விளங்கும் திரு. ச. த. சின்னத்துரை, ஜே. பி. அவர்களும் திரு. கு. குருசுவாமி அவர்களும் ஆற்றிவந்த அயராத பெரும் பணியினுலேதான் இம் மலர் "பொன்"ஞனதாக வெளிவருகின்றது. அச்சிட்டு வகையில் அயராது உழைத்த நியூ லீலா அச்சகப் பணியாளர்களுக்கும் எமது சபை நன்றி தெரிவிக்கும் கடப்பாடுடையதாகும். பொன்விழாச் சபையின் செயலாளராகவுமிருந்து யாவற்றையும் இயக்கிவந்த திரு கு. குருசுவாமி அவர்களை எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும், இம் மலரிலே வெளியிடுவதற்கான கட்டுரைகள் எழுதி வழங்கியோருக்கும், ஆசியுரைகள் வழங்கியோருக்கும் எமது சபையின் நன்றி உரித்தாகுக.

ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா

அரை நூற்றாண்டு நிறைவு விழா மலர்

கதிர்காம — யாத்திரிகர் — தொண்டர் — சபை

1925

கொழும்பு

1925 - 1975

இம்மலர் அட்டைச் சித்திர அமைப்பும் பதிப்பும் நியூ லீலா அச்சகம் கொழும்பு 12.

வேல் முருகா வேல் முருகா வேல் முருகா